ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா
வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | | ரூ 3—0 |
| 6 மாத சந்தா | ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு | ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில வருஷ ஆவணி மீ 17உ (1—9—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 17

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தன தயிலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிகப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளைசாருதல் | சொறி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும் |
| அஸ்திகாங்கை | |

### சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிசோதித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(38)

கலப்பு மணத்தால் சாதி ஒழியும்

எழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர் !!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்று மழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

# மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, எரிப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் ... பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை ... வயோதிகனை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணங்களைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

## குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ.15.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 16.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மலாய் நாட்டிலுள்ளவர் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழநி, S. I.



Souriya REGD.

## கர்ப்பாசய ரோக நிவாரணி

''சௌரியா''வின் அபூர்வ சக்தியைக்கண்டபெண்மணிகள் இதைஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி என்றும், அதி சிரேஷ்டமான அவுஷதமென்றும், விலையில்லா ஆபரணமென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகால பஹிஷ்டி, ருதுசிராவம், பஹிஷ்டை தடைபட்டுப்போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகால பிரசவம், கருப்பை தழுவி விடுதல், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, கணைச்சூடு, சந்தானமில்லாமை, மலபந்தம், இருமல், உப்பசம் முதலிய சகல ரோகங்களும் இந்த ''சௌரியா''வின் உபயோகத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல் நிவர்த்தியாகிவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

கேட்லாக் இனாம், ஏஜண்டுகள் தேவை.

சங்கராம் மெடிகல் ஹால்,

(7) சேலம்.



## குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்,

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு | ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | ... | 0—2—0 |


விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

(எப்) 14, மவுண்ரோட், மதராஸ்.



## A GOLD PLATED LEVER WRIST WATCH FOR. Rs. 6—14—0.



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பீடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். ஸிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். வீணிலே ஸிலிண்டர் கடியாரங்களில் பணத்தை யிழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,

(3) 19, G. P. O. MADRAS.



## முன்னேற்றம்

இது சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரில் இருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே. சி. நாராயணசாமி

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர், ''முன்னேற்றம்''

(எப்) 155, சிலிராேட், சிங்கப்பூர் (6)



## திருப்பூர் ஜவுளி தினுசுகள்

அழகான பலரகம் அச்சுவேஷ்டிகள், சால்வை ரகங்கள், அங்கவஸ்திரங்கள், ஷர்ட்டிங் பீஸ்கள் மிக நயமானதாகவே தயார் செய்யப்படுகிறது. வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விவரஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. Karuppanna Chettiar,
Khaddar Merchant
Tirupur, (S. India).,

# அங்கு சொன்னதை இங்கு ஏன் சொல்லுவதில்லை?

(கைவல்யம்)

சென்னையில் முகமது நபிநாயகமவர்களின் பிறந்த தினக்கொண்டாட்டத்தில் கனம் சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் செய்த பிரசங்கத்தைப் பற்றியே இவ்வியாசமெழுதப்படுகிறது. கனம் ஐயரவர்கள் பெரிய உத்தியோகத்தை வகித்து, அன்னிய தேசங்களெல்லாம் சுற்றி, பெரும் பணம் சம்பாதிக்கும் வக்கிலாகவிருப்பதால், பெரும் சபைகளில் அவருடைய பிரசங்கம் விரும்பப்படும்; அன்றியும் சமஸ்கிருத பள்ளி வருட கொண்டாட்டத்திலும் ஐயர் அவர்கள் சீமைக்குப் போகையில் வருணாச்சிரம மகாநாட்டுப் பார்ப்பனர்களின் தலைவர்கள் மாலைபோட்டு ஆசி கூறி அனுப்புவதாலும், வைசிராயிடம் தூது செல்ல திருச்சியில் வைதீகர்கள் கூடிய சம்மத வயது சட்டமறுப்புக் கூட்டத்தை ஆதரித்து அனுப்பின தந்தியாலும், மைலாப்பூரில் இந்து தருமத்தைப்பற்றி வி. வி சீனிவாச ஐயங்கார் செய்த பிரசங்கத்திற்கு தலைவராஇருந்ததினாலும், இவருடைய உத்தியோக அதிகார காலத்தில் பார்ப்பனருக்கே உத்தியோகங்களெல்லாம் கொடுத்து வந்தமையாலும், இவர் முஸ்லிம் மதத்தைப்பற்றி செய்த பிரசங்கத்தை உயர்ந்த ஜாதி இந்துக்கள் கவனித்திருப்பார்கள். அங்குசொன்னதுபோல இந்து சமூகங்களுக்கிடையிலும் இவர்கொண்ட இந்துமதத்தின் உண்மை தத்துவங்களை எடுத்து ஏன் சொல்லப்படாது? இவர் சொல்லவேண்டுமென்பதே எனது கோரிக்கை.

இந்து மதத்தத்துவங்கள் வெகு நுட்பமானவை. மனதாலேயே கிரகித்துக்கொள்ளக்கூடியவை. இஸ்லாமிய தத்துவமோ பிரத்தியட்சமான வாழ்க்கை யனுபவத்தையொட்டியுள்ளது. நான் அத்வைத வேதாந்த போதனையைப் பின்பற்றுபவன். இஸ்லாத்தின் தத்துவத்தைப் படித்தால் என் கொள்கைக்கும் அதற்கும் மாறுபாடில்லையென்று சொல்லும் இவர்கள் வார்த்தை உண்மையிலுமுண்மை என்பதை அறிவுடைய உலகம் ஒத்துக்கொள்ளும். அத்வைத வேதாந்த போதனையே இந்து மதத்தைச்சிலாக்கிப்பது. இஸ்லாமிய தத்துவமோ வேதாந்தத்தைப் போன்றது. வேதாந்த தத்துவமோ வெகு நுட்பமானவை. இஸ்லாமிய தத்துவமோ பிரத்தியக்ஷமான வாழ்க்கை அனுபவத்தை யொட்டியுள்ளது. இஸ்லாமிய தத்துவமும் இந்து தத்துவமும் ஒன்றாயிருக்கையில் இஸ்லாமிய தத்துவம் பிரத்தியக்ஷ வாழ்க்கை அனுபவத்தை ஒட்டி இருப்பதுபோல் இந்து தத்துவம மனதினாலே தெரியக் கூடியதென்றும், அது நுட்பமானவையென்றும் மறைத்துக்கொண்டு உலகப் பொதுவிதியை தள்ளித் தனித்தனி ஆசார வழக்கங்களையும், ஜாதிகளையும், தெய்வ வழிபாடுகளையும், அதில் பல கீழ்மேல் ஏற்பாட்டையும் தனித்தனிக் குணங்களாகக் கற்பித்துக் கொண்டு மனிதனுக்கு மனிதர் வேற்றுமை பாராட்டிக் கொண்டு இந்து மதமேயிருக்க வேண்டும். மதம் மனிதருக்குள்ள தீமைகளை நீக்கவந்ததாகச் சொல்லப்படுகிறதே யல்லாமல், மதம் கொடுமை செய்து கொண்டிருப்பதற்கு வந்தது அல்லவே? இந்து மதம் கொடுமைகள் நிறைந்து ஏழைகள்மீதும் அஞ்ஞானிகள்மீதும் அதிகாரமல்லவோ செலுத்திக் கொண்டிருக்கிறது. தத்துவ ஞானத்தைப் பரவ விடாமலும் சுதந்தரத்தைத் தடுத்தும் வரக்கூடிய எந்த மதம் தான் பிரகாசிக்கும். இந்து மதத்திலுள்ள அக்கிரமமான கொடுமைகளை மூடுவதற்கும் சாஸ்திரங்கள்பேரில் சுமத்துவதற்கும் இந்துமத தத்துவங்களை உபயோகப்படுத்துகிறார்களே அல்லாமல், இந்து மதத்திற்கு அதன் தத்துவங்களை உபயோகப்படுத்தி பிரத்தியட்ச வாழ்க்கை அனுபவத்தை ஒட்டியிருக்கும்படியாகச் செய்யவேண்டுமென்பதே சீர்திருத்தக்காரர்களின் எண்ணங்களாகும்.

நமது ஆத்மா பலவகையாக அமைந்துள்ளது. சிலவற்றிற்கு ஒருவித உபதேசமும், வேறு சிலவற்றிற்கு வேறு விதமான உபதேசமும் வேண்டியிருக்கிறது என்று சி. பி. அய்யர் சொல்லுகிறார். இந்த இடத்தில் இவர்தான் படித்த அன்னிய மதத்தையும் தன் மதத்தையும் மறந்து தன்னுடைய உலக அனுபோகங்களையும் விட்டு அசல் பார்ப்பானாக விளங்குகிறார். இவர் சொன்ன பிரகாரமே எல்லா சாஸ்திரிகளும் பல பண்டிதர்களும் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவதற்கு இந்து சாத்திரங்களில் ஆதாரங்களும் எழுதப்பட்டிருக்கிறது, பண்டிதர்களும் சாஸ்திரிகளும் அந்த ஆதாரத்தைப் படித்தவர்கள். இந்த ஆதாரமே மனிதர்களுக்குள் கீழ்மேல் கற்பிக்கவும் பிரிவுப்படுத்தவும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவுமிருக்கிறது. அதையே சாத்திரம் படித்த ஒவ்வொருவனும் சொல்லுகிறான். அதுபோலவே தன் கூட்டத்துப் பார்ப்பார்கள் சொல்லுவது அவருக்குத்தெரியும். அவர்களை விட்டுக்கொடுக்கப்படாது. சீமைக்குப் போய் வெள்ளைக்காரருடன் பலவித மாம்சங்களும் அநேகவித திராட்சை ரசமும் பருகிவிட்டால் பார்ப்பான் குணம் போய்விடாது. டி. ரெங்காச்சாரி ஆப்பிரிக்காவிற்குப் போய் திரும்பி வந்து நான் ஆப்பிரிக்காவில் பார்ப்பானாகவிருக்கவில்லை, இந்தியா வந்த உடன் பார்ப்பானாக விருக்கிறேன், என்று அவர் சொன்ன அனுபோகப் பிரகாரம் பார்ப்பான் இந்து மத ஆசார ஒழுக்கமின முள்ளவனாக விருந்தாலும், புண்ணிய பூமியில் பார்ப்பானாகவே யிருக்கிறான். அதினாலே தான் ஆங்கிலேயர்கள் இவ்விடம்வந்துபலநாளாயும்ஸ்பென்சர்சோடாவும் இங்கிலீஷ் சாராயமும்சாப்பிடும் பார்ப்பனன்கூட காரைக்காட்டு தொண்டமண்டல சைலாசப் பரம்பரையான வேளாளர் வீட்டுத் தண்ணீரை குடிக்கப்படாதென்று தடுக்கும் இந்து சாஸ்திரத்தின் பெருமையைக் காண முடியவில்லை. ஏனெனில், இந்து மத தத்துவங்கள் அதி நுட்பமானவை என்பதும், ஆத்மாபலவகைப்பட்டதால் அதனதன் அனுபவத்திற்கு ஊட்டவேண்டுமென்றும் சொல்லும் காரணங்களே இதற்கும் காரணம்.

இந்து மதத்திலுள்ளஜனங்கள் ஆத்மா மட்டுமா பல வகையாக அமைந்துள்ளது? இந்துமதம்விதித்தநாலுவர்ணத்திலும் ஒவ்வொரு வருணத்தின் ஆத்மாவும் ஒரே தன்மையுடையது தானா? இப்பொழுது பிராமணர்களென்று சொல்லிக் கொள்ளுகிறப் பார்ப்பனக் கூட்டமத்தனையும் வெகு நுட்பமானதும் மனதினாலேயே கிரகித்துக்கொள்ளக்கூடியதுமான இந்து மத தத்துவங்களைத் தெரியக் கூடியதுதானா? இந்து மதக் கூட்டத்தார்களான மற்றவர்களெல்லாம் இந்து மத தத்துவங்களை அறியக் கூடாத ஆத்மாக்கள் தானா? பார்ப்பனர் வேதம் படிக்கவேண்டும் மற்றவன் அவனுக்கு ஏவல் பணி செய்ய வேண்டுமென்று அன்று சொன்னது போலவே இன்றும் பார்ப்பான்தான் இந்து மதத்தத்துவம் படிக்கவேண்டும், மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படாது என்று கோவில் பள்ளியில் சொல்லுவது போலவே ராஜா அண்ணாமலை செட்டியார் பள்ளியில்கூட அந்த ஏற்பாடே நடைபெற்று வருகிறது. சிலவற்றிற்கு ஒருவித உபதேசமும் வேறு சிலவற்றிற்கு வேறுவித உபதேசமும் தேவையாக விருக்கிறதென்று அய்யர் சொல்லுகிறார். பார்ப்பார ஜாதியெல்லாம் ஒரேவித ஆத்மாவென்று சொல்ல முடியுமா? மற்ற ஜாதிகளெல்லாம் ஒரேவித ஆத்மாவென்றும் சொல்லமுடியாது. ஆத்மா ஜாதியல்ல. ஜாதி ஆத்மாவுமல்ல அப்படியிருக்க, ஒரு ஜாதிக்கு ஒரு உபதேசமும், இன்னொரு ஜாதிக்கு மற்றொரு உபதேசமும் நியாயமல்லவே? பார்ப்பனரில் தத்துவ நுட்பம் வாராத ஆத்மாவும், மற்ற ஜாதியில் தத்துவ நுட்பம் வரக்கூடிய ஆத்மாவுமிருக்கலாம். அந்த ஆத்மாக்களுக்கு எதுஉபதேசம். அந்த ஆத்மாக்களெல்லாம் அந்தரத்தில் எங்கே தூரியாடுவது? இஸ்லாமியதத்துவம் பிரத்தியட்ச வாழ்க்கை அனுபோகத்தை யொட்டியுள்ளதுபோல் சங்கரர் சொன்ன வேதாந்த மதத்தையும், இராமானுஜர் கோபுரத்தின்மேலிருந்து எல்லாரையும் எடுத்துக்கொள்ள வீசி எறிந்த தத்துவ உபதேசங்களையும் பொதுவாக எல்லா ஆத்மாக்களுக்கும் ஏன் சொல்லப்படாது? எடுத்துக்கொள்ளுகிற ஆத்மா எடுத்துக்கொள்ளட்டும். இப்பொழுது வேதப் பள்ளியில் படித்த ஆத்மாக்களெல்லாம் ஞானத்தையடைந்துவிட்டதா? காப்பிக்குக் கைகட்டி நிற்கச் செய்கிறதா சொல்லுங்கள்.

இந்து மதத் தத்துவத்தை ஆத்மாக்கள் பக்குவமில்லாமல் எல்லாருக்கும் சொல்லிவிட்டால் இந்து மதம் கெட்டுப்போய்விடும்; வருணாச்சிரமம் போய்விடுமென்றும் சொல்லுகிறவர்கள் இப்பொழுது இந்து மதமும் வருணாச்சிரமமும் என்ன நிலைமையிலிருக்கிறதென்பதை கவனிக்கட்டும். பலவித ருசியோடுவயிறுநிறையச்சாப்பிட்டு வயிற்றிற்கு சந்தனம் பூசி தெட்சணையை இடுப்பில் திருகி, வெற்றிலை போட்டு பார்ப்பனர்கள் மத்தியில் சமாராதனைப் பேச்சும் அதன் பிரபுவின் தூஷணை பூஷணைப் பேச்சுகளும் தான் இந்து மதமென்றால் அந்த இந்து மதம் கெட்டுத்தான் போகும். எல்லாருக்கும் இந்துமத தத்துவங்களைச் சொல்லிவிட்டால் இந்து தத்துவங்கள் எல்லாரும் தெரிந்து கொள்ளுவார்கள். தத்துவம் வேகாது, அழுகாது; அது இருந்தபடியே யிருக்கும். எல்லாருக்கும் பொதுவாக முஸ்லிம் மத தத்துவங்கள் முஸ்லிம்களுக்குள் பரவியிருப்பதினால் அவர்கள் மதம் விருத்தியாகிறதே அல்லாமல் கெட்டுப் போகவில்லை. நம்மைப் போலவே பணக்காரர்கள், ஏழைகள், அறிவாளி, படித்தவன், படிக்காதவன், உத்தியோகஸ்தன், வியாபாரி குடித்தனக்காரன், வைதீகன் லௌகீகன் முதலியவர்கள் முஸ்லிம் மதத்திலுமுண்டு. பிரத்தியட்ச வாழ்க்கை அனுபவத்தை ஒட்டினதத்துவத்தில் இந்து மதம் பரவாததினால் அவ்வொற்றுமை நமக்கில்லை. ஸ்மிருதி மந்திரவிதிகளின் நியாயங்களும், பெரிய புராணமும், எல்லா பாவங்களைத் தீர்க்கும் நீரும், பரமபதத்திற்குக் கொண்டுபோகும் நாமமும், நமமதச்சண்டைகளும், வெள்ளைக்கார நீதியின் பாதத்தில்போய் விழுகின்றன. உயர்ந்தஜாதிக்காரர்கள் என்று சொல்லும்படியானவர்களின் வயிற்றுப் பிழைப்பிற்குக்கதுமதத்தை இனியுமெத்தனைக் காலம் கெடுத்துக் கொண்டு வருவார்களோ, அவர்களுக்கு அனுகூலமாகப் படித்த பண்டிதர்கள் இருந்துகொண்டு மற்ற சமூகங்களை நசுக்கத் துணை புரிவார்களோ நாமறியோம்.

மசூதிகளிலோ வேறெந்த இடங்களிலோ முஸ்லிம்கள் சேர்ந்து தெய்வம் தொழ வேண்டும்; அவ்விதம் தொழுவதில் உயர்ந்த மனிதன் தாழ்ந்த மனிதன் என்னும் வித்தியாசம் கிடையாது. சுல்தானும் சரி அவருடைய அடிமையும் சரி; யாவரும் மசூதியில் தெய்வ முன்னிலையில்

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

### (கட்டுரை—2)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 6 முதல் 12 முடிய)

சுக்கிரீவன் மறுபடியும் இராமனை நோக்கி, "நீ இங்கு வந்த காரணம் அறியேன்; ஒரு அரக்கன் சீதையை எடுத்துப் போனதையும், சடாயுவைக் கொன்றதையும் அறிந்தேன். சீதையை எவ்வாறாவது கொண்டு வந்து சேர்ப்பேன். உங்கள் பெயரைக் கூவிக்கொண்டு ஓர் பெண் இராவணனுடைய மடியில் இருப்பதைப் பார்த்தேன். அவள் தன் மேலாடையில் தன் நகைகளை முடிந்து போட்டாள்" என்று அவைகளைக் காட்டினான். இராமன் அவைகளைக் கண்டு கண்ணீர்வடித்து அலறிக் கீழே விழுந்தான். அவைகளை அடிக்கடி மார்போடணைத்து பெருமூச்சு விட்டுக் கண்ணீர் பெருக, "தம்பி! இவை சீதையின் நகைகளா, பார்த்துச் சொல். கண்ணீர் வெள்ளத்தால் என் கண் மறைந்து பார்க்க முடியவில்லை" என்றான். இலக்குவன், "அண்ணா! நான் அவளுடைய பாத சேவை செய்திருந்தவனாகையால் அவளுடைய கால்களில் அணிந்திருந்த சிலம்புகளையே அறிவேன். தோளிலும், தலையிலும் அணிந்திருந்த நகைகளை அறியேன்" என்றான். இராமன், "குரங்கரசே! என்னுடைய மனைவியை எடுத்துப் போன பகைவனை இன்னானென்று சொல்" என வினவினான். சுக்கிரீவன் கண்ணீர் வடித்து, "அந்த இராவணனைப் பற்றிய செய்தி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அவனைக் கருவறுப்பதில் உழைப்பேன், நீ வருந்தாதே. நானும் மனைவியை இழந்தவனே" என்றனன். இராமன் துணியால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, சுக்கிரீவனைத் தழுவி, "உன்னை நண்பனாகப் பெற்றது என் புண்ணியமே. இராவணனைத் தேடிக் கண்டுபிடி. உனக்கு வேண்டியதைச் சொல், நான் செய்து முடிக்கிறேன்" என்றான். சுக்கிரீவன், "தமது நட்பு பெற்றாளிருக்கவேண்டியது, வாலியுடன் பகைத்து வாழ்கின்றேன்" என்றனன். இராமன், "அந்தப்பாவியை என் அம்பால் கொல்கிறேன்" என்றான். சுக்கிரீவன் "வாலி என்னை அடித்துத் துரத்தி இன்னும் கொல்ல முயல்கிறான், அனுமன் முதலியோர் என் துணைவர். வாலியை விரைவில் கொல்ல வேண்டும்" என வேண்டினான். இராமன் அவர்களுக்குள் விளைந்த சண்டையின் காரணத்தை வினவினான்.

சுக்கிரீவன், "இராம! எங்கள் தந்தைக்கு வாலியிடம் மிக்க அன்பு, தந்தை இறந்தவுடன் எங்களில் மூத்தவனை வாலி அரசனாயினான். துந்துபியின்மூத்த மகன் மாயாவிக்கும்வாலிக்கும் ஒரு பெண்ணைப்பற்றி பகை உண்டாயிற்று. ஒருநாள் இரவு நாங்கள் தடுத்தும் வாலி மாயாவியைத் துரத்திச் சென்றான். நானும் பின்னே போனேன். மாயாவி ஒரு குகையுள் நுழைந்தான். வாலி என்னிடம் அவ்வாசலிலேயே காத்திருக்கும்படி சத்தியம் வாங்கிக் கொண்டு அதனுள் நுழைந்தான். ஓராண்டு கழிந்தும் அவன் வாராததால் அவன் செத்தானென்றே நினைத்தேன். இரத்தமும் ஓடிவந்தது. அதனால் நான் அஞ்சி பாறையால் அந்தவாசலை மூடிவிட்டு வாலிக்கு உத்தரகிரியைகளையும் செய்துவிட்டு கிட்கிந்தைக்கு வந்து வாலி இறந்ததை ஒருவருக்கும் சொல்லவில்லை. அமைச்சர்கள் அதை எவ்வாறோ அறிந்து என்னை வற்புறுத்தி அரசனாக்கினார்கள். சில நாளில் வாலி அரக்கரைக் கொன்று கிட்கிந்தைக்கு வந்து என்னைக் கண்டு தண்டித்தான். நான் அவனை வெல்ல முடியுமேனும் அண்ணன் என்ற மரியாதையாய் சும்மா இருந்தேன். பின் நிகழ்ந்ததைச்சொல்லி மன்னிப்புகேட்டேன். அவன் அமைச்சரையும் குடிகளையும் அழைத்து சபைகூட்டி தான் குகைக்குள் போன ஓராண்டின் பின் அரக்கனைக் கொன்றதையும், வெளியில் வந்து பார்த்தபோது குகை அடைபட்டிருந்ததையும், காலால் மிதித்துப் பாறையைத் தள்ளி வந்ததையும் கூறி நான் அவனைக்கொல்லவேவாயிலை அடைத்தேன் எனச்சொல்லி என்னை ஒற்றை ஆடையுடன் துரத்தி விட்டான். அவனை நீ கொல்லவேண்டும்" என்றான். இராமன் அதற்கிசைந்தான்.

சுக்கிரீவன் பின்னரும், "இராம! வாலியினுடைய வல்லமையைக் கூறுகிறேன். அவன் விடிமுன் நான்கு கடலுக்கும் போய் வருவான். அவனுக்கு இணையானவீரர்ஒருவருமிலர். துந்துபி என்ற ஆயிரம் யானை வலியுடைய எருமை உருவினனான அரக்கன் கடலரசனையும் அவன்சொற்படி மலையரசனையும் போருக்கழைத்து, மலையரசன் சொற்படி வாலியை யடைந்து போருக்கழைத்தான். வாலி அவனோடு போரிட்டு வலி மிகுந்த துந்துபியைக் கொன்று காலால் எறிந்தான். அப்பிணத்திலிருந்து சிந்தின இரத்தத்துளிகள் மதங்க முனி குடிலில் தெறித்தன. உடனே முனி, "இதுசெய்தவன் இதனருகே வரின் அழியக்கடவன். அவனைச் சேர்ந்தோர் வந்தாலும் அழிவராக. நாளை முதல் இவ்வனத்துள் வரும் குரங்குகள் கல்லாக" என்று வெவ்வுரை இயம்பினன். இதையறிந்த வாலி அவனையடைந்து மிகப் பணிந்து பொறுத்தருள வேண்டினன். அம்முனி அவனை ஏறெடுத்தும் பாராது தனது குடிலுள் புகுந்தான். அது முதல் வாலி இங்கே வருவதில்லை. அவன் இங்கே வரமாட்டானாதலால் நான் இங்கே வாழ்கின்றேன். இது தான் துந்துபியின் எலும்பு. இதோ தெரிகிற ஏழு ஆச்சா மரங்களையும் வாலி தனது பலத்தால் ஒரே காலத்தில் ஒரு இலையேனும் இல்லாது போகுமாறு செய்ய வல்லவன். இத்தகைய வாலியை நீ எவ்வாறு கொல்வாய்?என்றனன்.'

இராமன் யாது செய்து சுக்கிரீவனுடைய ஐயத்தைத் தீர்க்கவேண்டுமென்று இலக்குவன் வினவ, சுக்கிரீவன், "துந்துபியின் எலும்பைக் காலால் எறியவேண்டும். இவ்வாச்சா மரங்களில் ஒன்றைத் துளைக்கவேண்டும்" என்றனன். அவன் மேலும், "வாலியைப் போரில் வெல்ல முடியாதென்றே இங்கே வாழ்கிறேன். இராம! உன்னுடைய போர் வலியை நான் நேரில் பார்க்காததாலேயே இது கூறினேன்" என்றான். இராமன் "என்னுடைய ஆண்மையில் சந்தேகமிருக்குமானால் இதோ தீர்த்து விடுகிறேன்" என்று சொல்லி துந்துபி எலும்பைக் காலால் எறிந்தான். சுக்கிரீவனோ, "இராம! இது வாலியால் எறியப்பட்டபோது தசை இரத்தத்தோடிருந்தது. வாலியும் போரிட்டுக் களைத்திருந்தான். நீ அந்நிலையில் இதை எறியாததால் உங்கள் இருவரில் யார் வலி அதிகமுடையோரென அறியக்கூடவில்லை. இம்மரத்தைத் துளைத்தால் அறிவேன்" என்றனன். இராமன் ஓர் அம்பால் ஏழு மரங்களையும்துளைத்தான். அது கண்ட சுக்கிரீவன் மகிழ்ந்து, "வாலியை இன்றே கொல்லவேண்டும்" என்று வேண்டினான். இராமன் அவனைக் கட்டித் தழுவி, "நீ போய்வாலியைப்போருக்கழை" என்றான். எல்லாரும் கிட்கிந்தைக்குச் சென்றுஅடர்ந்த காட்டிலுள்ள மரங்களில் மறைந்து நின்றார்கள். இவ்வளவாற்றையும் ஆராய்வோம்.

சுக்கிரீவன் சடாயு இறந்ததையும் அறிவேன் என்றான். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் (பக்கம் 24) "இலக்குவன் இச் செய்தியை அனுமானுக்குச் சொல்லவில்லை, சுக்கிரீவனுக்கு எப்படித் தெரியும்?" என்று எழுதுகிறார். இது கவனிக்கத் தக்கதே. சுக்கிரீவன் சீதையை இராவணனது மடியில்கண்டேன்என்றும்அவள் தனது மேலாடையில் நகைகளை முடிந்து போட்டாளென்றும் கூறுகிறான். இதனால் அதன்பின் சீதை இராவணனது மடியில் மேலாடை இல்லாமலே இருந்தாள் என அறியலாம். இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? காமங்கொண்டு தன்னைஎடுத்தேகும் இராவணனிடம் மேலாடையை எறிந்துவிட்டுச் சீதை இருந்தாள் என்றால் அவளுடைய செயலையும் அவளுடைய மன நிலையையும் என்ன என்பது?

இராமன் அந்நகைகளைக் கண்டு கோவென்றலறுகிறான். அவைகளை மார்போடணைத்துக்கலங்கி, "தம்பி! கண்ணீரால் என்கண் தெரியவில்லை. நீ இவைகளைப் பார்த்துச் சொல்" என்று கூறுகிறான். இப்படியும் ஒரு ஆண் மகன் இருப்பானா? இவனும்ஒரு வீரனா? இவ் அற்பத்தன்மையுடையவனையும் தெய்வமெனச் சிலர் மதிக்கின்றனரே! என்னே அவர்தம் மதியுடைமை! இலக்குவனோ பெரும் பொய்யனாக இருக்கிறான்! தான் அவளைப்பார்த்துக்கொண்டே வெறிகொண்டவனைப்போல நின்றதோடு "அடா பாவி! நீ என்னைப் பார்த்துக் கொண்டாவது இங்கேயே நிற்கலாமென நினைக்கிறாய்? நான் இதோ தீயில் விழுகிறேன்" என்று சீதை கதற மனமும் அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதை விடாதிருந்ததை முற்றிலும் மறந்தவனைப்போல இலக்குவன் "நான் சீதை காலைத்தவிர வேறு அங்கங்களைப்பார்த்தறியேன்" என்று கூறுகிறான். இவனுடைய பொய்ம்மைக்கோர் எல்லையும் உளதாமோ? இவர்களுக்கு மனச்சாட்சி என்பதே கிடையாது போலும்!

இராமன் சுக்கிரீவனிடம் சீதையை எடுத்துப்போன அரக்கன் யார் என்று வினவுகிறான். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 25-ல் பின்வருமாறு குறித்துள்ளார்:—"அவனை இன்னானென்று தெரியா"தென்று இலட்சுமணன் சொன்னான். மாருதி அவன் இராவணனென்று சொன்னான்.சுக்கிரீவனும் இராவணன் எடுத்துப் போனதாகச் சொன்னான். இராமனும் பிறகுஅப்படியேசொன்னான் ஆனால், இங்கே அவன் யாரென்று கேட்கிறான்." இக்குறிப்பால் இராமன் அறிவு கலங்கியிருந்தானென அறியலாம்.

அவ்வினாவுக்கு மறுமொழியாக சுக்கிரீவன் தனக்கு இராவணனைப் பற்றி ஒன்றும் தெரியாதென இராமனிடம் கூறுகிறான். இது முழுப் பொய். இந்த இடத்தில சீனிவாசய்யங்கார், "இது உண்மையல்ல, இதே விஷயங்களைப்பிறகு வானரர்களுக்கு இவன் சொல்லுகிறான்" என்று பக்கம் 26-ல் குறித்திருக்கிறார். இதே இடத்தில் மற்றொரு மொழிபெயர்ப்பாளராகிய அ. வீ. நரசிம்மாச்சாரியார் ஓர் நீண்ட குறிப்பு எழுதியிருக்கிறார். அது ஒவ்வொருவருக்கும் அவசியம் தெரிய வேண்டுமாகையால் அதனை இங்கே குறிக்கிறோம். அவர் பக்கங்கள் 1651, 1652, 1553, 1654 ஆகிய நாலு பக்கங்களில் விவரித்தது வருமாறு:—

"இங்கு சுக்கிரீவன் தனக்கு

இராவண விருத்தாந்தம் ஒன்றுமே தெரியாதென்றனன். ஆனால், அவன் சீதையைத் தேட வானரர்களை அனுப்பும்போது, 'அந்தச் சமுத்திரத்தினுடைய அக்கரையில் நூறு யோசனை தூரம் விஸ்தாரமுடையதும், மனிதர்களும் தேவதைகளும் புகக்கூடாததுமாகிய ஓர் தீவம் இருக்கின்றது. அங்கு முழுவதும் தேடிப் பாருங்கள். அந்தத் தேசம் துஷ்டஸ்வபாவனும், தேவேந்திரனை நிகர்த்த தேஜஸ் உடையவனும், ராக்ஷ சாதியுமாகிய இராவணனுடையது' என்றமையால், சுக்கிரீவனுக்கு இராவணனுடைய இருப்பிடமும் சாமர்த்தியமும் பராக்கிரமமும் நன்கு தெரியுமென்று வெளியாகிறது. இப்படியிருக்க அவன் இராமனைப்பார்த்து அவை ஒன்றும் தனக்குத் தெரியாதென்பது எப்படி எனில் இது தவறே. ஆயினும் சுக்கிரீவன் தன் காரியத்தை முதலில் நடத்திக்கொள்ளும் பொருட்டு இங்ஙனம் கூறினன். அனதுபற்றியே இராமன் பின்பு 'சுக்கிரீவா! எவ்விடத்திற்கு சீதையை எடுத்துக்கொண்டு போகக்கண்டனை?' என்று வினவினதற்கும் கூட மறுமொழி கூறவில்லை. ஏனெனில் "அவள் எடுபட்டுப் போகையில் கண்டேன்" என்று சொன்னால், தனக்கு அவள் போன இடங்கூட எப்படித் தெரியாமற் போகும்? இங்ஙனம் தெரிந்ததாக சூசனை செய்ததையும் கூட மீளவும் வினவியபொழுதும் சொன்னவனல்லன். இங்ஙனம் தெரிந்தும் சொல்லாதிருப்பின் ஆதியிலேயே மித்திரத்துரோகம் செய்தானென்று சொல்லலாகாது. சுக்ரீவன் தீர்க்க ஆலோசனையோடு தன் மனத்தில்தான் இராவண விருத்தாந்தம் எனக்குத் தெரியுமென்று சொல்வேனாயின் அப்பொழுது இராமன் பெரும் விசனத்தில் ஆழ்ந்திருக்கையில் முதலிலேயே சீதையைத்தேடவேண்டுமென்பான். அது யுக்தமன்று. வானரர்கள் வாலிக்கு ஆதீனகர்களாயிருக்கிறார்களேயன்றி எனக்கு வசப்பட்டவரல்ல எப்படியாவது அவர்களில் சிலரை வசப்படுத்திக்கொண்டாலும் இராவணனுடன் சிநேகம் பண்ணிக் கொண்டிருக்கிற வாலி நாம் விரும்பினபடி நடத்த எப்படிப் பொறுத்திருப்பான். ஆகையால் இருவர் காரியமும் பாழாய்விடும் என்று ஆலோசித்து மிகுந்த மதியுடையோனாகையால் தெரியாதது போல் நடித்தனன். இப்படியாயின் பிறகு வானரர்களை அனுப்பும்பொழுது சுக்ரீவன் இராவணனைக் குறித்துச் சொல்லும்வார்த்தைகளைப் பற்றி இராமனுக்குச் சங்கை உண்டாகாதிருக்குமா என்னில்—தாரை இலட்சுமணனோடு சொன்ன வார்த்தைகளைக் கேட்டதனால் இராமனுக்கு அங்ஙனம் சங்கை உண்டாக அவசியமில்லை அதாவது 'சுக்கிரீவன் பூர்வத்தில் இராவணனுடைய சங்கதியை அறியான். பிறகு தாரையின் வார்த்தைகளால் அறிந்தான்' என்று இராமனுக்கு மனத்தில் தோற்றுமென்க. இலட்சுமணனைப் பார்த்துத் தாரை 'இலங்கையில் நூறாயிரங்கோடி இராட்சதர்கள் இருக்கின்றனர். அவர்களெல்லோரையும் கொல்லாமல் சீதையை எடுத்துக் கொண்டு போன இராவணனைக் கொல்லச் சாத்தியமில்லை' என்றனள். மேலும் சக்கரவாள பர்வதம் வரையில் பூமி முழுவதும் திரிந்த சுக்கிரீவனுக்கு அதனுள்ளிருக்கும் இராவணனுடைய இருப்பிடம் முதலியவை எப்படித் தெரியாதிருக்கும்? அங்ஙனம் தெரிந்திருப்பது பற்றியே இராமனது பலத்தைப் பரீட்சிக்கும் பொழுது வாலி துந்துபி முதலானவர்களோடு எதிரிட்டதை பிரஸ்தாபிக்கும் சமயத்தில் வாலி இராவணனைச் செயித்த விருத்தாந்தத்தைச் சொல்லவில்லை. ஆனால், சுக்ரீவனுக்கு அப்பொழுது தெரியாது, தாரை சொன்ன பிறகே தெரியுமென்னலாகாதோ? என்னில், தாரையைப் பார்த்தது முதலாகக் காம விகாரங்கொண்டு மெய் மறந்திருக்கும் சுக்கிரீவன் தாரையோடு இராம காரியத்தைக் கலந்தாலோசிப்பதற்கு ப்ரசக்தியே நேரிட்டிராது. சுக்கிரீவன் சர்வப் பிரகாரத்தாலும் இராவணன் சங்கதி அறியானாயின் அப்பொழுது சீதையின் கூக்குரல் முதலியவற்றால் அவன் போன திக்கையாயினும் நன்றாகத் தெரிந்த மட்டும் அவசியம் சொல்லியிருப்பான். இங்ஙனம் தெரிந்ததையும் கூடச் சொல்லாமையால் மற்றவையும் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே சொல்லாதிருந்தானென்று ஊகித்துக்கொள்க சிலர் இராவணனுடைய தலத்தை அறியேன் என்பதற்கு இப்பொழுது இராவணன் இருக்குமிடம் தெரியாது என்று பொருள் கொள்ளவேண்டுமென்பர். ஆனால், அது சரியன்று. இராமன் சர்வப்பிரகாரத்தாலும் இராவண விருத்தாந்தம் தெரியாமல் அவன் சுயரூபம் கொஞ்சமாயினும் தெரியட்டுமென்னும் எண்ணத்துடன் சுக்கிரீவனைப் பார்த்து, 'அந்த இராட்சதன் எங்கே வாசஞ்செய்வான்' என்று வினவினன். அதற்கு சுக்ரீவன் தனக்குத் தெரிந்த அளவும் சொல்லாமல் 'அவன் இப்பொழுதிருக்குமிடம் எனக்குத் தெரியாது' என்று மறுமொழியுரைப்பது கபடமாகும். அவன் எப்போதும் வசித்திருக்கும் இடத்தை இராமன் வினவினனன்றி அப்பொழுதிருக்குமிடத்தை வினவவில்லை. இராவணனுடைய இருப்பிடம் மாத்திரம் தெரியினும் அதை நாசஞ்செய்கையில் அவன் தானே இவ்விடம்வருவானென்றன்றோ இராமனுக்குக் கருத்து. மேலும் சுக்கிரீவனுக்கு அப்பொழுது இராவணனிருக்குமிடம் தெரியாமல்போயினும் தனக்குத் தெரிந்திருக்கிற அவனுடைய சாமர்த்திய பராக்கிரமங்களையாயினும் சொல்ல வேண்டுமல்லவா? அவைகளையுங் கூடச் சொல்லவில்லை. சுக்கிரீவனுக்கு இராவணன் இருக்குமிடம் தெரிந்திருக்குமாயின் அந்தத் திசைக்கு மாத்திரமே வானரர்களை அனுப்புவானன்றி மற்ற திசைகளுக்குக்கூட அனுப்புவானோ? எனெனின் அவன் அந்த வானரர்களைப் பார்த்து இராவணனையும் சீதையையும் இங்குமங்கும் தேடிப் பார்க்க வேண்டும் என்றுரைப்பது இராவணன் சீதையைக்கொண்டு வெகு காலமானபடியால் அவன் சீதையை எங்கேனும் மறைத்து வைத்திருப்பான் என்னும்எண்ணத்துடன்சொன்னதாகக் கொள்ளவேண்டுமாகையால் இதுவும் பொருந்துகின்றது. மற்றும் சிலர், 'சர்வ விதத்திலும் அந்தப்பாப இராட்சதன் இருக்குமிடம் தெரியாதென்கையால் அவனிருக்குமிடம் எல்லா விதத்திலும் அடிமுதல் நுனிவரையில் தெரியாது. ஏதோ சில விதமாகக்கொஞ்சமே தெரியுமென்றும், இங்ஙனம் கொள்கையால் மேல் சுக்கிரீவன் கொஞ்சம் இராவணனுடைய சங்கதியைத் தெரிந்துகொண்டு சொல்லுவதோடு விரோதம் வராதென்றும், சொல்லுகின்றனர். இப்படியாயின் சுக்கிரீவன் பின்பு வானரர்களோடு இராவணனைக் குறித்து எவ்வளவு சொன்னானோ அவ்வளவு முதலிலும்கூட இராமனோடு சொல்லியிருக்க வேண்டுமல்லவா? அங்ஙனம் சொல்லாமையால் இப்படியும் கூறலாகாது. மற்றும் சிலர், 'ஒரு சம்வத்சரம் வரையில் இராவணன் சீதைக்குத்துயரம்விளைக்காதிருந்தது பற்றி அவனுக்கு அவளைக்கொண்டு வந்ததனால் பயன் இல்லாமற் போயிற்று. இராவணன் தினந்தோறும் சிவபூசை செய்வதுதான் விரும்பியதெல்லாம் கைகூடும் பொருட்டே. அவன் சீதையைக் கைப்பற்ற விரும்பி அவனுக்கு அது கைகூடாதாயின் அவன்செய்த சிவபூசை வீணென்று நினைத்து அந்தப் பூசைக்கு வேறொரு பலனையாயினும் கொடுப்பதற்காகத் தெய்வமே நின்று தடை செய்கையில் சுக்கிரீவனுக்கு இராவணனைப் பற்றித் தெரிந்தும் தெரியாததுபோலவே ஆயிற்று' என்பார்கள். நேரான காரணம் இருக்கையில் அதிர்ஷ்டத்தைக் காரணமாகக் கற்பித்துச் சொல்வது யுக்தமன்று பர தாரங்களைப் புணருவது சிவபூசாபலமென்பது நிரம்பவும் அழகாயிருக்கின்றது; ஆகையால் சுக்கிரீவன் இராவண விருத்தாந்தம் தெரிந்தும் வேண்டுமென்று மறைத்தானென்பதே பொருந்துகின்றது."

மேலே கண்டதே நரசிம்மாச்சாரியாருடைய குறிப்பாகும். எவ்வாற்றானும் சுக்கிரீவன் பெரிய சூதன் என்பதே வெளிப்படை. மேலும் சுக்கிரீவன் எடுத்ததெல்லாம் ஐயுறும் தன்மையன் என்பது அவன் இராமனுடைய ஆற்றலிலும் ஐயுறுவதால் விளங்கும். தான் இராமனுடைய ஆற்றலில்ஐயுறுவதை அவனிடம்நேரிலேயே கூறுகிறான். அவன்கூறியபடி துந்துபியை எறிந்து மரங்களையும் துளைத்த பின்னரே இராமனை நம்புகிறான். இராமனோ எப்படியாவது சுக்கிரீவனைத் திருப்திசெய்தால்தான் தன் காரியம் நிறைவேறுமென எண்ணி அவன் சொல்லுகிறபடியெல்லாம் நடக்கிறான்.

சுக்கிரீவன் கொடிய சகோதரத் துரோகி. வாலியினிடம் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு பின் அவ்வாக்குறுதிக்கு மாறாக சுக்கிரீவன் குகை வாயிலை விட்டுக் கிட்கிந்தைக்குப் போகிறான். போகிறவன் சும்மா போகாமல் குகை வாசலையும் அடைத்துவிட்டுப் போகிறான். அவன் வாலி இறந்ததாகத் தான் எண்ணியதை ஊரில் ஒருவரிடமும் கூறாதிருக்கிறான். ஏனெனில் உண்மையில் அவனுக்கு வாலி சாகவில்லை என்ற நம்பிக்கை யிருக்கிறது. அதனால் கூறாதிருந்து பின் கொஞ்ச காலத்தில் ஒருவாறு துணிந்து அரசனுமாகிறான். இவனுடைய தீவினையே இவனைச் சுட்டது. இவ்வளவு தீமையை இவன் செய்யவில்லையென்றால் இவனுக்குப் பின்னுங் அதிக துன்பத்தை வாலி செய்திரான். வாலியோ மிகவும் நல்லவன். அவன் தனது அமைச்சர்களையும் குடிகளையும் அழைத்து அவரிடம் சுக்ரீவனுடைய தீமதியைக் கூறியே அவனை நாட்டிலிருந்து துரத்தியிருக்கிறான். இது சுக்ரீவனுடைய வாய்மொழியாலேயே தெரிகிறது. இவ்வளவு தீயவனை யார்தான் உடன்வைத்து வாழ இசைவர்?

வாலி மிகவும் உத்தமனாகவே காணப்படுகிறான். அவன் துந்துபியைக்கொன்று எறிந்தபோது மதங்க முனிவனுடைய குடியில் இரத்தம் சிந்தியமையால் அம்முனிவனிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறான். அம்முனிவனோ இவனை ஏறெடுத்தும் பாராமல் உள்ளே போகிறான். இம்முனிவன் எவ்வளவு கொடியவன்? இவன் கூறிய வெவ்வுரை பலித்ததென்பது உண்மையாகுமோ? இம்முனிவனைப்போலும் வீணன் உளனோ?

"இணர் எரி தோய்வன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று" இது தமிழ் மக்களுடைய சிறந்த கொள்கை. அதாவது தீயில் வைத்தாங்கு கொடிய துன்பம் செய்தோராயிருந்தாலும் நம்மை வந்து சேர்ந்தால் வெகுளாது மன்னிப்பதே பெரியோர் கோள் என்பது. இம்முனிவன் தமிழ் மக்களைக் கெடுக்க வந்த தீயவனே யாதலின் இவன் பெரியவனாவ தெங்ஙனம்? பெரியவனாயினன்றோ அடைந்தோரை மன்னித்து வாழ்த்த வேண்டுமென்ற பெருங் குணம் பொருந்தும்? அப்படியே இருந்தாலும் கெடுதி செய்தவன் வாலி, அவனை மட்டும் சபிப்பதே முறை. அதைவிடுத்து இம்முனிவன் குரங்குகளையெல்லாம் தன் வனத்துக்கு வந்தால் கல்லாய்ப் போக எனவும் கூறுகிறான். இவனும் ஒரு முனிவனா? உயிர்க்குறுகண் செய்யாமையன்றோ தவத்துக்கு இலக்கணம்? இவன் பெருமகோன்

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

# கீதையின் தத்துவம்

(ஸ்ரீ, ப. சு. தண்டபாணி)

கட்டுரை- 5.

(சோக அத்தியாயம்)

நமது நான்காவது கட்டுரையில் அருச்சுனன் கிருஷ்ணனிடம் கூறிய சோகமொழிகளைக் கூறி அதை மறு கட்டுரையில் விளக்குவதாக எழுதியிருந்தோம். பந்து ஜனங்களால் நிரம்பிய திருதிராஷ்டிரன் மகன் சேனையைக் கொல்லுவதால் சந்தோஷம் வராது பாவமேதான் சம்பவிக்கும் என்று பார்த்தன் சொல்லியதாகக் கீதையில் சொல்லப்பட்டிருப்பது ஆச்சரியமல்ல ஆனால் அவர்களைக் கொல்லுவதன் மூலம் குலதருமம் கெடும் என்றும், வருண சங்கிரகம் ஏற்படும் என்றும் சொல்லி சநாதன தர்மக் கொள்கைகளுக்கு அஸ்திவாரம் போட்டிருப்பது தான் விநோதமாயிருக்கிறது. எதிரிகளின் சேனையைக் கொன்றால் அவர்களின் குலம் நாசம் அடையத்தான் வேண்டும். அது அவ்வெதிரிகளைக் கொல்லுபவனின் சந்தோஷத்திற்கும் சௌகரிய வாழ்வுக்குமாகவேதான் செய்யப்பட்டது. குல நாசத்தினால் பரம்பரையாக அடைந்து வந்துள்ள குலத்தின் சர்வ தர்மங்களும் நாசப்படும் என்று அருச்சுனன் அஞ்சியதில்தான் விஷயமிருக்கிறது. எதிரியின் சேனையிலே பல தேச அரசர்களும் வந்து நிறைந்திருக்கின்றனர் பரம்பரைப் பழக்கமாக—அக்காலத்திலேயே ஆகிவிட்ட—ஆரிய தர்மங்களைப் பாதுகாக்க வந்த இப்பல அரசர்களும் மாய்வதால் அவர்களுக்குக் குல நாசம் ஏற்பட்டு அதனால் இந்த பழந் தர்மங்களும் கெடக்கூடும்; அதனால் ஆரிய ஆதிக்கப் பிடிப்பு தளரக்கூடுமாதலால் அதற்கிடம் தரக்கூடிய குல நாசம் கூடாது என்று அருச்சுனன் கூறியதாகக் கூறப்பட்டது. நீண்டகாலத்துக்கு முன்பே ஆரியர்களின் வருணாசிரமக் கோட்பாடுகள் பாரதநாட்டில் நிலைத்து வேரூன்றி விட்டன. அந்தணர்களுக்கு அடுத்தபடியாக உயர்ந்தவர்களாக வைக்கப்பட்ட க்ஷத்திரியர்கள்தான் ஆரியப் பார்ப்பனர்களுக்குப் பெரும்பலமாக இருந்தார்கள். இவ்வே க்ஷத்திரிய குலத்தில் பெரும் பகுதி மக்கள் மாய்வதால் வருணாசிரமதர்மம் குலைந்துபோகுமே என்ற கவலை ஏற்பட்டது இயல்பே. இதிலிருந்தே வருணாசிரமக் கோட்பாடுகளை என்றைக்கும் நிலைக்கச் செய்ய கீதையின் ஆசிரியர் எவ்வளவு கவலை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பது நன்கு புலனாகும். மேலும் குல தருமம் கெடுவதனால் குலத்தை அதருமம் வந்து மூடிக் கொள்ளுமென்றும், அதனால் ஸ்திரீகள் தூஷிக்கப்படுவார்கள் என்றும், விபசாரிகளாகி விடுவார்களென்றும், வருண சங்கிரக மேற்பட்டு ஜாதிக் கலப்புண்டாகும் என்றும் விஜயன் கூறுகிறான் நாட்டில் நிலைத்திருந்த இவ்வாரிய தருமம் கெட்டால் அதற்கு விரோதமான சமத்துவ தருமம் தலை கிளப்ப ஆரம்பிக்கும். அது அதருமம் ஆகிவிடுமாம். ஒருவகுப்புக்கு உயர்வும் விசேஷ சலுகையும், பணம் சம்பாதிக்க வழியும், தேடிக்கொடுக்கும் பாழும் வருணாசிரமம் தொலைந்தால் எல்லோருக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமுமளிக்கக் கூடிய முறைதான் முற்பட நேரும். அதனால் பழைய மாமூல் பறந்துபோகும். ஜாதி என்பது ஒழிந்துவிடும். யாவரும் சமம் என்பது உறுதிப்படும். அதனால் ஜாதிபேதமில்லாமல் கலப்பு மணங்கள் உண்டாகவும் கூடும். அப்பொழுது வருணாசிரமம் இல்லதொழிந்து வருணசங்கிரகம் ஏற்பட்டு எல்லோரும் ஓரினமாகச் சந்தோஷவாழ்க்கையிலீடுபடுவார்கள். இது பழைய வருணாசிரமக்காரர்களுக்குப் பிடிக்காது. ஆதலால் அரசர்கள் ஒழிந்தால் வருணாசிரமம் ஒழியுமென்றும், அதனால் கெடுதல்கள் ஏற்படும் என்றும் கீதையின் ஆசிரியர் அருச்சுனன் வாயிலாகக் கூறினார். ஜாதி முறை தகர்க்கப்பட்டு கலப்புமணம் ஏற்பட்டால் சமத்துவத்திற்கும் நீதிக்கும் அது ஒத்ததேயாகும். ஆனால் காமாலைக் கண்ணுள்ள வருணாசிரமிகளுக்கு அது அதருமமாகவும், அத்தகைய முறையிலீடுபடும் ஸ்திரீகள் விபசாரிகளாகவும், கலப்பு மணத்தால் பிறந்த புத்திரர்களால் குலத்திற்குத் தோஷம் உண்டாகும் என்பதாகவும் படுகின்றது. அதனால் தான் அருச்சுனன் மேலும் கீதையில் பின்வருமாறு சொல்லுகிறான்:—"வருண சங்கிரகத்தினால் ஜாதிக்கலப்புள்ள புத்திரர்கள் ஏற்படுவார்கள். அதனால் குல நாசம் செய்தவனுக்கு நரகம் சம்பவிக்கும். அத்துடனும் நில்லாது அவன் குலத்துக்கும் நாசம் வரும். பிதுர்க்களும் பிண்ட உதவிக் கிரியைகளில்லாமல் நரகத்தில் விழுந்து அதோகதி யடைவார்கள்." அதனால் ஜாதிக்கலப்பு கூடாதென்றும், கலப்பு ஜாதி புத்திரர்கள் தருமமுறையில் பிறந்தோர் ஆகாரென்றும் ஏற்படுகின்றதல்லவா? இவ்வாறு குல தருமம் கெட்டு குலநாசம் ஏற்படுவதால், பிதுர்க்கள் கூடபிண்ட உதவிக் கிரியைகளில்லாமல் நரகத்தில் வீழ்ந்து அதோகதியடைவார்களாம்! இதிலிருந்தும் என்ன தெரிகிறது? பிதுர்க்கள் கூட்டம் தம் குலத்தவரிடமிருந்து பிண்ட உதவிக்கிரியைகளை எதிர்பார்த்திருப்பதாகவும், மேற்கூறியாங்கு குலநாசமாகிக் குல தருமங்கெட்டு வருண சங்கிரகமேற்படுவதால், பிதுர்க்களுக்குப் பிண்டவுதவியளிக்க முறையானவர் எவருமில்லாமல்-கிரியைகள் தடைப்பட்டு- அதனால் பிதுர்க்கள் நரகில் வீழ்ந்து அதோகதி யடைவதாகவும் தானே தெரிந்துகொள்ளக் கூடியதாயிருக்கிறது. பிதுர்க்களிடம் நம்பிக்கையும அவர்களுக்குக் கிரியை செய்ய வேண்டிய அவசியமும் இதில் மறைமுகமாக வற்புறுத்தப்பட்டிருக்கின்றதல்லவா? எப்படிப் பார்த்தாலும் பிதுர்க்களுக்களிக்கும் பிண்ட உதவிக் கிரியைகளும் மற்ற ஆரியருதமச் சடங்குகளும் பார்ப்பனருக்கும் ஏனைய புரோகிதருக்கும் அளிக்கும் வரியாக யிருக்கிறதேயல்லாமல் வேறல்ல. எனவே, இதெல்லாம் கெட்டுப்போகுமே என்றும், ஜாதிக் கலப்புண்டாகி வருணாச்சிரமம் ஒழிந்து போகுமே என்றும் அருச்சுனன் கவலைப்பட்டதாகக் கீதையின் ஆசிரியர் கூறுவது வருணாசிரமதருமத்தை நிரந்தரமாகச் செய்வதில் அவருக்குள்ள ஆர்வத்தையே காட்டுகிறது. 'குலங்கெட்டு ஜாதிக்கலப்புண்டாகக் கூடாது. பிதிர்க்களுக்கு நரகவாசமேற்படும்! என்பவைகளால் வருணாசிரம தருமமும் எப்பொழுதும்நிலைத்திருக்க வேண்டும் என்றும், பிதுர்க்களுக்குப் பிண்டம் உதவி புரோகிதக் கூட்டத்தைக் கொழுக்கவைக்கவேண்டும் என்றும்தான் அர்த்த மேற்படுகிறது. அரசர்களிறந்தால் அவர்கள் குலம்நாசமேற்பட்டுவருணாசிரமத்திற்குவிரோதமாக இவ்வளவும் நடக்கும் என்பதைக் குறிப்பாகக் காட்டப்பட்டு அதனால் யுத்தம் செய்யத் தயாராக இல்லை என்பதாகஅருச்சுனன்மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. மிக உத்கிருஷ்டமான தத்துவநூல் என்று சொல்லப்படும் கீதையில் எவ்வாறு சநாதன தர்மம் ஆங்காங்கு நிரம்பிக் கிடக்கின்றதென்பதை இது மெய்ப்பிக்கின்றது. தவிரவும் இவ்வாறு குல தருமங்கெடச் செய்தவனும் குல நாச மடைவான் என்றும்,நரகில் வீழ்வான் என்றும் பயமுறுத்தப்பட்டிருக்கிறது. நிதான புத்தியுடன் இவற்றை ஆராய்ந்து பார்ப்போருக்கு நாம் மேலே எடுத்துக்காட்டியபடி வருணாசிரமத்திற்கு எவ்வாறு கீதையில் வக்காலத்து வாங்கப்பட்டிருக்கிறது என்பது புலப்படாமற் போகாது. இனி சோகத்தால் கலங்கிய அருச்சுனனுக்குக் கிருஷ்ணன் என்ன சொல்லுகிறார் என்பதை கவனிப்போம்.


## நான் யார் தெரியுமா?


ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன் நான்!



என்னைப்பற்றி எந்த ஊரிலே வேண்டுமானாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து எங்களைக் குதூகலப்படுத்தி விட்டுப் போகிறானென்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். தினசரி மூப்பது அல்லது நாற்பது புதிய பிள்ளைகளைப் பெற்று வருகிறேன். இன்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 30,000 பிள்ளைகளையாவது பெற வேண்டுமென்பது நோக்கம். ஆனால், அப்பனைப் பார்க்கவேண்டுமானால் காசு கொடுத்துத்தான் பார்க்கவேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மாதிரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணா செலவு செய்து ஒரு கார்டு எழுதுங்கள். மறுநாளே உங்கள் இருப்பிடம் தேடி வந்து குதித்திடுவேன். என் பெயர் படத்தில் பாருங்கள். என் இருப்பிடம்,

(3) 244, தங்கசாலை வீதி, சென்னை.





இதுவரையில் தமிழில் வெளிவராதது.

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்"

அதன்,

"அநுபோகப் பயிற்சிமுறையும்"

(ஆப்டோன் படங்களுடன்)

(தபால் சார்ஜ் வேறு) விலை ரூபா 1—8—0

சிலோன், பினாங்கு,மலாக்கா முதலிய வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும். ஏஜெண்டுகளும் தேவை. மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

மோட்டார் பாடசாலை

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக்கொள்ளலாம்

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும். மற்ற விவரத்திற்கு எழுதவும்.

மதராஸ் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை.

# திருநெல்வேலி
# சைவ மெய்யன்பர் மகாநாடு

## திரு பி. சிதம்பரம் பிள்ளையவர்களின் வரவேற்புப் பேருரை

(முன் வெளியீட்டின் தொடர்ச்சி.)

சைவ மதத்தையும், சைவக்கலைகளையும் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் இந்த ஆதீனங்கள் பண்டு ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் இன்று இந்த ஆதீனங்கள் அடைந்திருக்கும் நிலைமையை நினைத்தால் சைவர்களாகிய நாம் வெட்கத்தால் தலைகுனிய வேண்டியதுதான். அரசியல் வாதிகளும் வக்கீல்களுமான ஸ்மார்த்த பிராமணர்கள் சூழ்ச்சியினால் இந்த ஆதீனங்கள் எல்லாம் சீரழிந்து விட்டன. சைவ சித்தாந்தப் போதனை தற்கால ஆதீனங்களில் நடைபெறவில்லை. சில வருஷங்களுக்கு முன் ஆறுமுகநாவலர் என்பவர் இந்த ஆதீனங்களின் ஆபாசங்களைக்கண்டு முறையிட்டார். இந்த ஆதீனங்களெல்லாம் எரி நரகத்தில் விழுந்து அழியக்கடவது என்று சபித்தார். ஆனால் ஆதீனங்கள் அழியவில்லை. ஒருகால் நரகத்தில் தீயில்லையோ என்னவோ? நமது ஆலயங்கள் வேசிவீடுகளாய்விட்டன; ஆதீனங்களோ கொலைக்களமாயிருக்கின்றன. ஒன்றோ இரண்டோ ஆலயங்களும், ஆதீனங்களும் ஒழுங்காக நடைபெறலாம். அவைகளை நாம் கவனிக்கத் தேவையில்லை.

ஆதீனங்களில் சைவசித்தாந்த போதனை நின்றதோடு, சைவ சமயமும் பாழாகத் தொடங்கிற்று. அதற்கு ஸ்மார்த்த பிராமணர்களே காரணமாகும்.

### தமிழுக்குச் சனியன்கள் யார்?

இனி, தமிழ் இலக்கியத்தின் நிலைமையைப்பற்றி ஆராய்வோம். சமண மதத்தைத் தொலைக்க பிராமணர்களும் சைவ வேளாளர்களும் ஒன்று சேர்ந்தது முதல் நமது தமிழ் இலக்கியத்துக்கும் சனி தசை ஆரம்பமாயிற்று. சமயச் சார்பாகவும், இலக்கியத் துறையிலும் உண்டான தமிழ் ஆரியக் கலவையினால் கடைசியில் தமிழர் ஆரியர்களுக்கு அடிமைப்பட வேண்டியதாக நேர்ந்தது. சம்ஸ்கிருதம் பெருமையில் மயக்குற்ற ஒரு பெரிய சைவ வித்வான், தமிழைத் தன் தாய்மொழி என்று கூறவும் வெட்கம் கொண்டாராம். இவ்வண்ணம் வெகு காலம் சைவர்களும், ஸ்மார்த்தர்களும் உறவாடி வந்ததினால் சம்ஸ்கிருதம் முதலிடமும் பின்னிடமும் பெறலாயிற்று. டாக்டர் கால்ட்வெல்போன்ற பெரியார்கள் முன்வராவிட்டால் தமிழ் இதற்குள் நிர்மூலமாயிருக்கும்.

### புராணங்கள் பொய்க்கதைகளே

இவ்வண்ணம் சைவர்கள் பிராமணர்களைப் போற்றிப் பூசித்து வந்ததனால், திராவிடக் கலைகளும், திராவிட நாகரிகமும் மறையத் தொடங்கின. பிராமணர்களும் சைவர்களும் சேர்ந்து சமணர்களுக்கும் புத்தர்களுக்கும் இழைத்த துன்பங்களெல்லாம் புராணமாகப் பாடப் பெற்று தமிழ் இலக்கியத்திலும் சேர்க்கப்பட்டுவிட்டது. சரித்திரச் சார்பாகப் பார்த்தால் அப்புராணங்களெல்லாம் பொய்க் கதைகளாகவே இருக்கவேண்டும். அவை மெய்க்கதைகளாயிருக்குமானால் அப்பாதகச் செயல்களுக்குக் காரணமாயிருந்த பிராமணர்களும், சைவ வேளாளர்களும் மகா பாவிகள் என்றே சரித்திரக்காரர் முடிவு கட்டுவார்கள். அந்தப் புராணங்கள் பொய்க் கதைகளா மெய்க்கதைகளா என்றுகூட இப்பொழுது ஆராய்ச்சி செய்யக் கூடாதாம். ஏனென்றால், புராணங்கள் புனிதத் தன்மை வாய்ந்தவைகளாம்; ஆகையால் ஆராய்ச்சி செய்வது பாவமாம்!

இராமாயணக்கதையும் இது போலவே ஒரு பெரிய மோசடியாகும். அதைப்பற்றி வேறோரிடத்தில் விஸ்தாரமாகக் கூறுகிறேன். புனிதமான புராணங்கள் ஆராய்ச்சிக்குரியதல்லவென்னும் நீதி ஒப்புக்கொள்ளப்பட்டால் சென்ற 1500 வருஷங்களுக்கிடையில் தோன்றிய இலக்கிய நூல்களைப்பற்றி நாம் ஆராய்ச்சியே செய்யக்கூடாதென்று ஏற்பட்டுவிடும். ஏனென்றால், சென்ற 1500 வருஷங்களிலும் மத சம்பந்தம் பெறாத நூல்கள் எழுதப்படவில்லை.

சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ் தோன்றிற்று என்ற அபிப்பிராயம் உருப்பெற்றதோடு, வேளாளர்கள் பிராமணர்களிடத்து வைத்திருந்த பக்தி உச்ச நிலை அடைந்தது. அம்மட்டோ? சைவசித்தாந்தம் ஆரியருக்குரியதென்றுகூட ஒரு வாதம் தலையெடுத்தது. இதற்கெல்லாம் காரணர்கள் சைவ வேளாளர்களே. பிராமணர்களின் வாயடிக்குப் பயந்து ஸ்மார்த்தக் கிணற்றில் சைவ வேளாளர்கள் விழுந்து மாண்டார்கள். இப்பொழுது அவர்களது பிரேதத்துக்குப் பிராமணர்களும் சைவ வேளாளர்களும் உரிமை பாராட்டுகிறார்கள்.

கடைசியில் முடிவென்ன? அற்ப சொற்பமாயிருக்கும் விவேகிகளென விளக்கம்பெற்ற சைவர்களை ஆதீனத்தாரும் கைவிட்டு விட்டார்கள். அம்மட்டோ! சைவ சித்தாந்தத்துக்கு முற்றிலும் முரணான ஒரு தத்துவ சாஸ்திரத்தையும் ஸ்மார்த்தர்கள் உருப்படுத்திவிட்டார்கள். சிவாலயங்களையும் சைவர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள். இப்பொழுது தமிழ் இலக்கியமும் தமிழர் சமயமும் பிராமணர் தக்வால் உயிர்வாழும்படி நேர்ந்திருக்கின்றது.

இத்துடனாவது இந்தக் கூத்துமுடிவடையுமா? அதுவுமில்லை. இன்று அரசியல் உலகில் பிராமணர்கள் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள். ஓராயிரம் வருஷங்களுக்கு முன் வேளாளர்கள் ஆதிக்கம் பெற்றிருந்தனர். சமணர் கழுவேற்றப்பட்டதோடு வேளாளர் ஆதிக்கமும் ஒடுங்கிற்று. பிராமணர்கள் வேளாளர்களைத் தூண்டிவிட்டுத் தமக்குஆகவேண்டிய காரியங்களையெல்லாம் சாதித்துக் கொண்டார்கள். அதுமுதல் வேளாளர்கள் பிணங்களாகவே இருந்து வருகிறார்கள்.

சென்ற நூறு வருஷங்களுக்குள் அரசியலில் தமக்கு இருந்துவரும் ஆதிக்கத்தினால் ஸ்மார்த்த மதம் வலுப் பெற்றுவிட்டது. அவர்கள் கல்வியிலும் வளர்ச்சியடைந்துவிட்டனர். சைவர்களோ தங்கள் பழைய புராணங்களைப் பாடிக்கொண்டு சீரும் சிறப்பு மிழந்து நிற்கின்றார்கள்.

### ஸ்மார்த்த விளம்பரம்

ஸ்மார்த்த குருவான லோககுரு சங்கராச்சாரியாரின் திக்விஜயத்தை நீங்கள் அறியீர்களா? ஸ்மார்த்த மதத்தை வலுப்படுத்தி பாமர மக்களை ஏமாற்றுவதற்காகவே அவர் அடிக்கடி திக்விஜயம் செய்கிறார். அவரது பல்லக்கைச் சுமந்து செல்லும் சிஷ்யர்கள் யார்? ஸ்மார்த்த கலெக்டர்— ஸ்மார்த்த ஜட்ஜ்— ஸ்மார்த்த வக்கீல் ஸ்மார்த்த பிரபுக்கள் முதலியவர்களே. இவர்கள் சங்கராச்சாரியை சுமந்து கொண்டு செல்வதினால் அவர் லோககுரு ஆய் விடுகிறார். சைவ வேளாளர் அந்த சங்கராச்சாரிக்கு தக்ஷிணையளிப்பதினால் மோட்சம் கிடைக்குமென்று பணத்தை வாரி இறைக்கிறார்கள். ஸ்மார்த்த நண்பர்களும் அந்த சைவ வேளாளரின் சைவமதப் பற்று, ஆஸ்திகப் பற்று, பெருந்தன்மை முதலியவைகளைப் பற்றி புகழத் தொடங்குகிறார்கள். பிராமணர்கள் அவரைக் கண்ட விடத்திலெல்லாம் வாழ்த்துகின்றார்கள். இந்த அற்பப் புகழ்ச்சியில் மயங்கி சைவ வேளாளர் பிராமணர்களுக்கு போஜனமளிக்கிறார். அவரைவிடப் பணக்காரரான பிராமணர்களும் வயிறு புடைக்க உண்டு அவரை வாழ்த்துகிறார்கள்.

திருவிதாங்கூரில், திருவிழாக் காலங்களில் தேர்வடம்பிடித்தவுடன் ஆலயத்துக்குள் பிராமணர்களுக்கு இலை போடப்படுகிறது. வேளாளர்கள், கடு வெயிலில் தேரிழுத்துக் கஷ்டப்படும்போது பிராமணர்கள் கோயிலுக்குள் சுகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேளாளர் தேர் இழுக்க மறுத்தால் சர்க்கார் அவர்களுக்கு அபராதம் போடுகிறார்கள். ஆனால், பிராமணர்களுக்கு அபராதம் விதிப்பதில்லை பிராமண போஜனத்துக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டால் அதற்குபொறுப்பாளியான உத்தியோகஸ்தருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. இதுதான் திருவிதாங்கூர் நியாயம்.

ஸ்ரீ சங்கராச்சாரியின் திக்விஜயம், ஸ்மார்த்தர்கள் பாமரர்களை ஏமாற்றச் செய்யும் விளம்பரங்களில் ஒன்று.

பார்ப்பனர்கள் யாகம் செய்வது எதற்காக? ஸ்மார்த்த மதப் பெருமைகளை சைவர்களுக்கு விளம்பரப்படுத்துவதற்காக யாகம்செய்யப்படுகிறது. இந்த யாக மோசடி, சைவ மதத்தின் மூலக்கொள்கைக்கும், ஆலய வழிபாட்டுக்கும் முற்றிலும் முரணானது. இந்தக் கொடும் பாதகச் செயலைக் கண்டிக்க வேண்டியது உண்மைச் சைவன் ஒவ்வொருவனுடைய கடமையாயிருந்தும், பார்ப்பனர்களுக்குப் பயந்து ஒரு சைவனாவது கண்டிக்க முன் வரவில்லை, இக்காலத்தில் பிராமணர்கள் மாமிச பட்சணம் செய்வது அபூர்வ காட்சியல்ல. ஆகவே யாக காலங்களில் மட்டும் மாமிசம் தின்கிறோம் என்று பாசாங்கு செய்ய தேவையேயில்லை. அதனால் ஒருவரும் ஏமாந்தும் போகமாட்டார்கள். இந்த மாதிரி ஏமாற்றம் பார்ப்பன தந்திரங்களில் ஒன்று.

வருணாச்சிரம தர்மத்தைப்பற்றிச் சென்னைப் பார்ப்பனர் உக்குரலிடுவதும் ஒரு விளம்பர முறையே. சென்னைப் பார்ப்பனர்களின் வர்ணம் எது? அவர்களுக்கு ஏதாவது வர்ணம் உண்டா? சென்னைப் பார்ப்பனர்களின் தர்மம் எது? உத்தியோக வேட்டைதானே அவர்கள் குல தர்மம்.

வருணாச்சிரம தர்ம மகாநாடுகளுக்கும் கண்ணியம் பொருந்திய சைவ வேளாளர்களை அவர்கள் ஏன் அழைக்கிறதில்லை. சமணர்களைக் கழுவேற்றிய காலத்தில் அவ்விரு வகுப்பாரும் ஒத்துழைத்ததுபோல் இப்பொழுதும் ஏன் ஒத்துழைக்கக் கூடாது? சைவ மகாநாடுகளும், வருணாச்சிரம தர்ம மகாநாடுகளும் தனித்தனி கூட்டி காலத்தையும் பணத்தையும் சிரமத்தையும் வீண் விரயம் செய்யத் தேவை யென்ன? சமணர்களைவிட பயங்கரமான ஒரு சத்துருவைத் தொலைக்க இரு சமூகத்தாரும் ஏன் சேர்ந்து உழைக்கக்கூடாது? இந்த இரண்டு சமூகங்களும் இரகசியமாக வேலை செய்வதாய் பலர் சந்தேகிக்க ஏன் இடமளிக்க வேண்டும்? அவர்கள் மெய்யாகவே போர் தொடுக்க எண்ணினால், வெட்ட வெளிச்சத்தில் இரு சமூகத்தாரும் ஒன்று சேர்ந்து சுயமரியாதை இயக்கத்தைத் தாக்கட்டுமே! இந்த சந்தர்ப்பத்திலும் பார்ப்பனச் சூழ்ச்சி தாண்டவமாடத்தான் செய்கிறது. தங்கள் செல்வாக்கும் அதிகாரமும் பறிபோவது கண்டும் பார்ப்பனர்கள் வருணாச்சிரமதர்ம மகாநாடுகளில் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி பிரஸ்தாபிப்பதே இல்லை. சமணர்களை ஒழிக்க, பார்ப்பனர்கள் பண்டு சைவர்களைத் தூண்டிவிட்டதுபோல், இப்பொழுது சுயமரியாதைக்காரரைத்தொலைக்க சைவர்களைத் தூண்டி

விடுகிறார்கள். சைவர்களுக்கு உதை கிடைப்பதுதான் 'மிச்சம்'; காசு இலாபம் பார்ப்பனர்களுக்கே.

நான் இதுகாறும் கூறியவற்றால் ஒரு விஷயம் பெறப்படுகின்றது. சைவர்களின் ஜன்ம சத்துரு சுயமரியாதை இயக்கத்தாரல்ல, சைவர்களின் தோழர்களும் ஞானாசிரியர்களும், சுவர்க்க வழிகாட்டிகளும், சைவர்களை இக்கோலமாக்கியவர்களும், சைவர்களுக்குள் கட்சி வேற்றுமை உண்டுபண்ணியவர்களுமான பார்ப்பனர்களே அவர்களின் பெரிய சத்துருக்கள்.

சைவ மகாநாடுகளெல்லாம் நமது சுயமரியாதை இயக்கத்தைத் தாக்கும் நோக்கத்துடன் கூட்டப்படுவதாக நான் நம்பவில்லை. மகாநாடுகள் எந்த நோக்கத்துடன் கூட்டப்பட்டாலும் சரி, எனது நண்பர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அத்தகைய மகாநாடுகளில் பங்கு கொள்வார் என்றே நம்புகிறேன். சமீபத்தில் நடைபெற்ற சைவ மகாநாடுகளில் அவர் வெளியிட்ட அபிப்பிராயங்கள், நமது இயக்கம் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்னமேயே அவர் கொண்டிருந்த அபிப்பிராயங்களாகும். ஆனால், இந்த மகாநாடுகள் கூட்டியவர்களின் எண்ணம் நல்லெண்ணமாயிருந்தாலும், திராவிட மக்கள் விழிப்புற்று முன்னேற முயற்சி செய்யும் இக்காலத்தில் அம்மகாநாடுகள் கூடியது சரியல்லவென்றே நான் நினைக்கிறேன்.

நான் இதுகாறும் கூறியதன் நோக்கம் சைவர்களுக்குள்ளேயே பிளவு இருக்கக்கூடாது என்பதுதான். அத்தகைய அபிப்பிராய வித்தியாசமுடைய சைவர்களும் ஒற்றுமையாயிருந்து வேலை செய்ய வேண்டும். சைவர்களுக்குள் மனவேற்றுமையும் விரோதமும் இருக்கவே கூடாது. விவேக விளக்கம்பெற்ற சைவர்களுக்கு ஒரு தத்துவ ஞானமுறையும் சமயமும் தேவையானால், சுயமரியாதைக் கொள்கைகளைத் தழுவி ஒரு புது தத்துவஞான முறையையும் சமத்துவத்தையும் அவர்கள் உருப்படுத்தட்டும். ஆரியக்கலப்பால் உருப்பெற்ற பழைய சைவ சித்தாந்தத்தை அவர்கள் குழிதோண்டிப் புதைத்து விடட்டும். எது எவ்வாறாயினுஞ் சரி, நமது சமயம் புதுப்பிக்கப்பட்ட வேண்டியது இன்றியமையாதது.

நியூட்டன் பூமியின் ஆகர்ஷணசக்தியைக் கண்டுபிடிக்கு முன்னமும் ஆப்பிள் பழங்கள் பூமியில் விழுந்து கொண்டுதானிருந்தன. இப்பொழுதும் விழுந்து கொண்டுதானிருக்கின்றன. ஈன்ஸ்டினுடைய புதுக்கொள்கைகள் நியூட்டனது ஆகர்ஷணக் கொள்கையை ஒரு கால் வீழ்த்திவிடக்கூடும். ஈன்ஸ்டின் ஒரு யூதனாயிருப்பதினால் அவருடைய கொள்கையை ஒப்புக் கொள்ளக்கூடாது என்றாவது நியூட்டனுடைய ஆகர்ஷணக் கொள்கை காலப்பழக்கம் பெற்று விட்டதினால் ஈன்ஸ்டின் கொள்கைகளை ஒப்புக் கொள்ளக்கூடாது என்றாவது ஒரு கணித சாஸ்திரியும் கூற முன் வரமாட்டான். சைவமதம் விருத்தியடைய வேண்டியது தான். சைவ சித்தாந்தத்தை உருப்படுத்திய சைவ நிபுணர்கள் தற்கால நிலைமைக்கும், தற்கால மக்களின் மனப்போக்குக்கும் பொருத்தமான ஒரு சிவமதத்தை இப்பொழுது உருப்படுத்தட்டும். அந்த மதத்தை நாங்கள் மிக மனமகிழ்ச்சியோடு வரவேற்கத்தயாராயிருக்கிறோம். அத்தகைய ஒரு மதம் தோன்றும் நாள் தமிழர்களுக்கும் சைவர்களுக்கும் திராவிடக் கலை வளர்ச்சிக்கும் உகந்த ஒரு பொன்னாளாகும்.

சுயமரியாதைக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளும் சைவர்கள் சமய வாதச் சேற்றில் வீழ்ந்து உழலப் போவதில்லை. சமய வாதத்தால் ஒரு பயனும் ஏற்படாது, சமூகமும் முன்னேற்றமடையாது. அதனால் ஒருவரும் இலாபமடையவு மாட்டார்கள். (தொடரும்)

## மதுரை—இராமநாதபுரம் பார்ப்பனரல்லாத இளைஞர் 2-வது மகாநாடு

ஆகஸ்டு, 25ந் தேதியன்று பிற்பகல் 2–30 மணிக்கு மதுரை—இராமநாதபுரம் பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு கூடிற்று. மகாநாடு கண்கட்கு இனியது பயக்கத்தக்க வகையில் வெகு அழகாய் நிறைவுப் பெற்றிருந்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், முன்னேற்றம் என்ற சொற்களே ஆங்குள்ள விளம்பரங்களில் காணப் பெற்றனவே யன்றி, முருகன் துணை, ஆனைமுகன் துணை, நம்மைக் கடவுள் காக்க, என்னும் சொற்கள் காணப்படவில்லை. மகாநாட்டிற்கு 1,500 சனங்கள் ஆண் பெண் இருதிறத்தாரும் நிறைந்திருந்தனர். திரு. ஈ. வெ. இராமசாமியார், ஆர். எஸ். நாயுடு, கனம் மந்திரி முத்தையா முதலானவர்களும், மற்றும் பல தலைவர்களும் விஜயம் செய்திருந்தனர். மகாநாட்டு மண்டபத்திற்குள் இன்னிசையுடன் தலைவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏனைய தலைவர்கள் வந்ததும் திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியார் மேடைமீதில் ஏறவும், திரு. எஸ். அருணாசலமும் மற்றும் இருவர்களும் திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியாரைத் தூக்கி நாற்காலி மீதிருத்தினர். உடனே பெரும் கர முழக்கம் எழுந்தது.

பின்னர் மந்திரி திரு. முத்தையா இம்மகாநாட்டை ஓர் அரிய சொற்பொழிவாற்றித் திறந்துவைத்தார். பிறகு பானகலரசர் படத்தை திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்கள் ஓர் அரிய அறிவுரையுடன் திறந்து வைத்தார். மற்ற விவரம் அடுத்த வெளியீட்டில் காண்க.

## சுயமரியாதைத் திருமணங்கள்

திருவிதாங்கூர்:— திருவிதாங்கூரில் முதன்முறையாக சுயமரியாதை விதவா விவாகம் அதி சிறப்பாய் நடைபெற்றது. தம்பதிகளாய் திரு. சூரியனுக்கும், செல்வி உண்ணாமலை அம்மாளுக்கும் அதுபோது எழுந்தருளியிருந்த அன்பர், சுற்றத்தார், அனைவரும் ஆசி கூறினார்கள். இது நிகழ்ச்சி பற்றி குடியரசுக்கும் 1-0-0 ரூபாய் நன்கொடை அனுப்பப் பெற்றுள்ளது. (இதன் புகைப்படம் இவ் வெளியீட்டிற் காண்க-ப-ர்)

## திருவிதாங்கூர் முதல் சுயமரியாதை விதவை மணம்



நிற்பவர்கள்: திரு சி. எஸ். வேலாயுதம் பி. ஏ., அ. பி. உச்சினிமாகாத்மா காளிசாமி, இ. சுப்பிரமணியன், ச. சுப்பையா, செல்வி சி. மீனாட்சியம்மை, இராமசாமி

உட்கார்ந்திருப்பவர்கள்: திரு. உ. நல்லசிவன், ரா. சுப்பையா, தா. சூரியன், அ. அண்ணாமலை அம்மாள், சிதாணு அம்மாள்.

ஆசார்:—ஆசாரில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கப் பிரசாரப் பயணம், கோடாங்கிபாளையம் கர்ணம் திரு. சாமிநாதபிள்ளைமகன் திரு. ரங்கசாமிக்கும், ஆசார் திரு. ஆறுமுகம் பிள்ளை மகள் செல்வி அங்கமுத்தம்மாளுக்கும் சீர்பெற சுயமரியாதை வாழி, தம்பதிகள் வாழி என்னும் முழக்கத்தினிடையே சுயமரியாதைமுறையில் திருமணம் நிகழ்ந்தது.

சூலூர்—திராவிட வாலிப சங்கத்தின் அழைப்பிற்கிணங்கி, திரு. இராமசாமிப் பெரியாரின் சொற்பெருக்கின் பயனாய், திராவிட சங்கத்து ஆதரவில் 23-8-29 வெள்ளியன்று, இவ்வூர் அகமுடையார் சமூகத்தில் கீழ்கண்டவாறு சுயமரியாதை

# ஈரோட்டில் தலைவர்கள்

## முஸ்லிம் வாலிப சங்கத் திறப்புவிழா

### பிரசாரப் பள்ளிக்கூடத் திறப்பு

24-8-29ந் தேதி காலை கோவையிலிருந்து திருவாளர்கள் சி. எஸ். இரத்தினசபாபதி அவர்களும், ஆர். கே. ஷண்முகம் அவர்களும், சென்னையிலிருந்து திரு. எ. ராமசாமி அவர்களும் வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்கு திருவாளர் மு. ச. முத்துகருப்ப செட்டியார் அவர்கள் வீட்டில் காலைசிற்றுண்டி விருந்துவழங்கப்பட்டது. அவ்விருந்துக்கு பழைய கோட்டை பட்டக்காரர், மற்றும் தாலூக்கா, ஜில்லா போர்டு முனிசிபல் கவுன்சிலர்கள், சேர்மென், வியாபாரிகள், மற்றும் அநேக வெளியூர் பிரபல கனவான்களாகியவர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

#### ஊர்வலம்

சிற்றுண்டி முடிந்ததும் தலைவர்களுக்கு மாலையிட்டு அங்கிருந்து மோட்டார்கார்களில் வரிசையாக சுமார் 500, 600 கனவான்கள் சூழ்ந்துவர, மேள வாத்தியம் பாண்டு வாத்தியம் ஜேஜே!சப்தம் முழங்க, இரு மருங்கிலும் இரண்டு யானைகளும், முன்புறம் 6 குதிரைகளும் வர, ஊர்வலமானது கோர்ட் வீதி, அக்கிரகாரா வீதி, கடை வீதி ஆகிய வழியே முஸ்லிம் வாலிப சங்கத் திறப்புவிழா கொண்டாட்ட பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டது. வழிநெடுக வளைவுகளும், தோரணங்களும், சுயமரியாதை கொள்கை வாக்கியம்கொண்ட அட்டைகளும் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. ஊர்வலம் பந்தலுக்குள் நுழையும்போது சுமார் 2,000 பேர்கள் ஆண்களும் பெண்களுமாக நிறைந்து விட்டார்கள்.

#### திறப்புவிழா

திறப்புவிழா ஆரம்பித்ததும் முதலாளி ஜனாப் கே. எ. ஷேக்தாவூத் அவர்கள் திரு. ஈ. வெ ராமசாமியைத் தலைமை வகிக்க பிரேரேபித்ததும் திரு: அய்யா கவுண்டர் ஆமோதிக்க பெருத்த கரகோஷத்தினிடையில் திரு: ராமசாமி அக்கிராசனம் வகித்ததும் தலைவர்களுக்கு வாலிப சங்கத்தாராலும், வர்த்தக சங்கத்தாராலும் உபசாரப் பத்திரங்கள் படித்துக்கொடுக்கப்பட்டன. ஆறு பத்திரங்கள் முறையே ஜனாப் ஷேக்தாவூத் அவர்களாலும் பாச்சா அவர்களாலும், முத்துக் கருப்ப செட்டியார், பச்சைமுத்து செட்டியார் ராமசாமி நாயக்கர் அவர்களாலும் படித்துக் கொடுக்கப்பட்டதும், அக்கிராசனர் தலைவர்கள் பெருமையை எடுத்துச்சொல்லி திரு. ஷண்முகம் அவர்களை முஸ்லீம் வாலிப சங்கத்தை திறந்துவைக்கும்படி கேட்டுக்கொண்டார். திரு. ஷண்முகம் உபசாரத்திற்குப்பதில் அளிக்கும் முறையில் சில வார்த்தைகளில் வாலிபர் பெருமையையும், முஸ்லிம் வாலிப சங்கம் செய்யவேண்டிய வேலையையும் எடுத்துச் சொல்லி சங்கத்தைத் திறந்து வைத்தார். பிறகு திரு. எ. ராமசாமி முதலியார் அவர்கள் உபசாரப் பத்திரத்திற்கு பதிலளித்து உலகம் முழுவதும் சீர்திருத்த எண்ணம் கொண்ட வாலிபர்களால் விடுதலையடைந்ததென்று அநேக உதாரணங்களால் எடுத்துச்சொன்னார்.

திரு. இரத்தின சபாபதி அவர்களும் உபசாரப் பத்திரத்தில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்து முடிப்பதாகச் சொல்லி மற்ற தலைவர்களின் பெருமையையும் எடுத்துச் சொல்லி தன்னாலானமட்டும் உழைப்பதாக உறுதி கூறினார். பிறகு அக்கிராசனர் திரு. ராமசாமிமூடப்பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் ஒழிக்க வாலிபர்களே தகுந்தவர்கள் என்றும், முஸ்லீம் வாலிபர்களேமிகவும் தகுந்தவர்கள் என்றும், இதுவரையில் மத சம்பந்தமான மூடநம்பிக்கை ஒழிப்பதில் மகமது நபி அவர்களைப்போலும், கமால் பாட்சா அமீர் தைஜாம் ஆகிய வீரர்களைப் போலும் யாரும் செய்ததில்லை என்றும், இவர்கள் கொள்கைகளை இப்போது நாட்டிற்கு வேண்டியிருக்கிறதென்றும், இந்திய முஸ்லீம் வாலிபர்கள் இப்பெரியார்களைப் பின்பற்றினால் கூடிய சீக்கிரம் இந்தியா சுயமரியாதையும் விடுதலையும் பெற்ற நாடாகி உலகத்திற்கும் சுயமரியாதையும் விடுதலையும் வாங்கிக் கொடுக்க முடியும் என்றும், எந்த சீர்திருத்தமும் சமயமும் கால தேச வர்த்தமானத்தின் தன்மையை அனுசரித்துச் செய்ய வேண்டியதென்றும் சொல்லி கூட்டத்தை கலைத்தார்.

#### பகல் விருந்து

தலைவர்கள் உள்பட சுமார் 200 பேர்களுக்கு பழைய கோட்டை பட்டக்கரர் எஜமானர் அவர்கள் வீட்டில் பகல் விருந்துநடந்தது. அங்கேயிதும் சாதி மத வகுப்புபேதமில்லாமல் எல்லோரும் ஒன்றாய் உட்கார்ந்து சமபந்தி சாப்பாட்டு விருந்தாய்நடந்தது.

#### அஸ்திவாரக்கல் நாட்டல்

விருந்து நடந்ததும் தாலூக்கா போர்டாபீசில் ஜில்லா போர்டு தலைவர் திரு. இரத்தின சபாபதி அவர்களுக்குப் போர்டாரால் ஒரு உபசாரப்பத்திரம் படிக்கப்பட்டு அவர் தாலூகா போர்டாபீஸ் கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டும் விழா கொண்டாடப்பட்டது.

#### கோவாப்ரேட்டிவ் உபசாரம

பிறகு ஈரோடு அர்பன்பாங்கியின் சார்பாக தலைவர் திரு. ஈ. எஸ். கணபதிஅய்யர் அவர்கள் பாங்கிக்கு தலைவர்களை அழைத்திருந்ததற்கிணங்க அங்குசென்றதும்திரு ஈ.வெ ராமசாமி அக்கிராசனத்தில், திரு. கணபதி அய்யர் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு, திரு. எ ராமசாமி கோவாப்ரேஷன் என்பது பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். பிறகு அக்கிராசனர் முடிவுரையுடனும் பாங்கி தலைவர் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் முடிந்தது.

#### பிரசார பள்ளிக்கூடத் திறப்பு விழா

பிறகு திரு. ஈ. வெ.ராமசாமியார் மூன்றுவது மண்டபத்தில் பிரசாரப் பள்ளிகூட திறப்பு விழாநடை பெற்றது. அதாவது திரு. எ. ராமசாமி அவர்களை தலைமை வகிக்கும்படி திரு. எஸ். ராமநாதன் பிரேரேபிக்க. திரு. ராமசாமி ஆதரிக்க திரு எ. ராமசாமி அக்கிராசனத்தமர்ந்ததும் சுயமரியாதைச் சங்கத்தாராலும், உண்மை நாடுவோர்சங்கத்தாராலும் உபசாரப் பத்திரங்கள் பெண்களாலும் பெண்குழந்தைகளாலும் வாசித்துக் கொடுக்கப்பட்டவுடன் திரு.எ.ராமசாமி அவர்கள்சுயமரியாதைக் கொள்கைகளின் மேன்மைகளையும் தான்பள்ளிக்கூட மாணவர் காலமிருந்து அனுசரித்து வருவதையும் தனக்கு அவற்றினிடம்உள்ள பற்றுதல்களையும் அவற்றை சென்றவிடங்களிலெல்லாம் தான் பிரசாரம் செய்வதைப்பற்றியும் அவற்றிற்கு விரோதமாய் சொல்லப்படும் பழிகளுக்குப் பதிலும் சொல்லி திரு. ஷண்முகம் அவர்களைப் பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார். பிறகு

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

---

முறையில் திருமணங்கள் நிறைவேற்றப் பெற்றன.

செல்வி — திருவாளர்

(1) எழுவம்மாளுக்கும் — பெருமாள் தேவருக்கும்.

(2) எழுவம்மாளுக்கும் — கிருஷ்ண தேவருக்கும்.

(3) மாரியம்மாளுக்கும் — அழகாத்திரித் தேவருக்கும்.

(4) ஜயம்மாளுக்கும் — ஆறுமுகத் தேவருக்கும்.

(5) அங்கம்மாளுக்கும் — செல்லத் தேவருக்கும்.

[இதனைப் பாராட்டுகின்றேம்-ப-ர்.]

நிலக்கோட்டை:—திரு. ஜெகநாதனுக்கும் செல்வி மகமாயி அம்மாளுக்கும்; திரு. நடராஜனுக்கும், செல்வி தவமணி அம்மாளுக்கும்; திரு. குருசாமிக்கும் செல்வி ஞானரத்தினம் அம்மாளுக்கும் சுயமரியாதைக் கொள்கைப்படி எவ்வித ஆபாசச் சடங்குகளுமின்றி திருமணங்கள் நிகழ்ந்தன.

கும்பகோணம்:—திரு. வே. ராமசாமி அவர்கட்கும், செல்வி ஜபலட்சுமி அம்மாளுக்கும் சுயமரியாதைத் திருமணம் நிகழ்ந்தது.


24-8-29ந் தேதி யன்று இவ்வூர் பிச்சைப் பார்ப்பார் தெருவிலிருக்கும் சுயமரியாதை வீரர் திரு: பி. முருகையநாடார் அவர்கட்கும், மணிமங்க திரு. எம். பலவேறுநாடார் அவர்கள் மகள் செல்வி லோகம்மாளுக்கும் மோட்சத் தரகரின்றி திரு: இராவணதாசரால் சுயமரியாதை முறையில் திருமணம் நிகழ்த்தப்பெற்றது. சாதிவேற்றுமையயின்றிய விருந்தொன்றும் நடைபெற்றது.

ஈரோடு சுயமரியாதைப் பள்ளிக்கூடத்திற்கு 2 ரூபாய்களும், குடிஅரசுக்கு 2 ரூபாய்களும், திராவிடனுக்கு 2 ரூபாய்களும் நன்கொடை அளிக்கப்பட்டுள்ளது. [பாராட்டுகின்றேம். ப-ர்]

முத்துராமலிங்கபுரம்:—திரு. வேங்கிடசாமி அவர்கட்கும், செல்வி சொக்கம்மாளுக்கும் சுயமரியாதைத் திருமணம் நிகழ்ந்தது.

ஒரே காலத்தில் 6 புடவை வாங்கினால் ஒரு புடவை இனாம்.
புதிய மாதிரி! இமிடேஷன் சமிக்கி தோட்டி! விலை சரசம்!

காசி மத்தாப்பூ சேலை




இதுவரையிலும் இவ்வித கண்ணைக் கவரும் சேலையை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். இம்மாதிரியான அசல் தொட்டிப்பூ போட்டசேலை, ரூ. 100, 150, 200 போட்டாலும் கிடைக்கும். தற்காலம் யாரும் மேற்படி மாதிரி சேலையை அணிந்துகொள்ள டை சேலை எங்களால் பச்சை, ரோஸ், மஞ்சள், மேகவர்ணம் எவிடிரோப், டார்க்புளு முதலிய கலர்களில் தயார்செய்யப்படுகிறது. இவற்றை நேரில் கண்ட ஒவ்வொருவரும் வாங்கத் தவறமாட்டார்களென்பது உண்மை. விலையும் வெகு சகாயம்.

16 முழ நீளம் 2½ முழ அகலம் இமிடேஷன் சமிக்கித் தொட்டி காசிமத்தாப்பு சேலை விலை ரூபா 7 வெளிநாட்டு F, M. S. வாசிகள் முன்பணம் அனுப்பவேண்டும். கேட்லாக்குக்கு எழுதுக.

எஸ். ஏழுமலை அண்டு கம்பெனி, P. B. நெ 226
G. P. O. மதராஸ்

(35)



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவுசூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

சென்னை 1929 செப்டம்பர்மீ 1உ

# தேசிய இயக்கம்

சென்ற வாரம் சுயமரியாதை இயக்கம் என்னும் தலைப்புக் கொடுத்து அவ்வியக்கத்தின் கொள்கைகளைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும், அதன் நிலையைப் பற்றியும், செல்வாக்கைப் பற்றியும், இதுவரை அது செய்திருக்கும் வேலையைப் பற்றியும் ஒருவாறு குறிப்பிட்டிருந்தோம். இவ்வாரம் தேசிய இயக்கம் என்னும் தலைப்புப் பெயர்கொடுத்து அதன் கொள்கை, திட்டம், நிலைமை, செல்வாக்கு, அது இதுவரை செய்திருக்கும் வேலை ஆகியவைகளைப் பற்றியும் ஒருவாறு விவரிப்போம்.

## அதன் பொருள்

சாதாரணமாக யோசித்துப் பார்த்தோமானால் இந்தியாவில் தேசியமென்கின்ற பதமே தப்பான வழியில் மக்களை ஏமாற்றிப் பிழைக்க ஒரு கூட்டத்தார், அதாவது மேல் ஜாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் கற்பனை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தாசர்களாக இருந்தால்தான் பிழைக்க முடியுமென்று கருதிய சில பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்பவர்களால் ஆதரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தார் சூட்சியாலும் பாமர மக்களை ஏமாற்றி சிலர் பிழைக்க உபயோகப்பட்டுவரும் ஒரு பாதகமும் அபாயகரமுமான அர்த்தமற்ற ஒரு வார்த்தையாகும்.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தேசியமென்பது மக்களின் "ஆத்மார்த்த" இயல் என்பதில் கடவுள், மோட்சம், நரகம் என்கின்ற வார்த்தைகள் எப்படி அர்த்தமற்றதாகவும் புரோகிதக் கூட்டமும், பாதிரிக் கூட்டமும், முல்லாக் கூட்டமும், சன்யாசிக் கூட்டமும் பாமர மக்களிடம் சமயத்திற்கு ஒரு அர்த்தமும் சந்தர்ப்பத்திற்கு ஒரு கருத்துமாய் சொல்லி அவர்களை ஏமாற்றிப் பிடுங்கித்தின்று சோம்பேறிகளாய் இருந்து நோகாமல் வாழ்வதற்காகச் செய்துகொண்டிருக்க உபயோகிக்கப்பட்டு வருகின்றதோ, அதேபோல் தேசியமென்னும் பதமும் சரீரப் பிரயாசை ஒரு சிறிதும் எடுத்துக்கொள்ள இஷ்டமில்லாமல நெஞ்சத்தில் அழுக்குப்படாமல் பாமரர்களை ஏமாற்றிப் பிழைக்கவும் கீர்த்திபெறவும் கண்டுபிடிக்கப்பட்ட சாதகமாகும்.

இந்தப்பதமானது ஆங்கில பாஷையில் 'நேஷனல்' என்கின்ற பதத்தின் மொழிபெயர்ப்பு என்கின்ற முறையில் ஏற்பட்டதே தவிர மற்றபடி அது இந்தியாவின் வேறு எந்தப் பாஷையிலும் எந்த கருத்திலும் இருந்ததல்லவென்றே சொல்லலாம்.

அன்றியும் ஒரு சமயம் பத அர்த்த உணர்ச்சியானது தேசத்தின் பொதுவான நன்மைகளை உத்தேசித்ததாகக் காணப்படுவதாயிருந்தாலும் அப்பதத்தின் பேரால் நடைபெற்றுவரும் முயற்சிகள் முழுவதும் அரசியல் சம்பந்தமான துறையில் சில உத்தியோகங்களையும், அதிகாரங்களையும் மாத்திரம் கருதி அவைகளை அரசாங்கத்தாரிடமிருந்து அடைவதற்காக செய்யும் முயற்சிகளாகவே இருந்து வருகின்றதேயல்லாமல் வேறில்லை. உதாரணமாக தேசியம் (அதாவது இந்திய தேசியக் காங்கிரஸ்) ஏற்பட்டு இன்றைக்குக் கிட்டத்தட்ட 50,60 ஆண்டுகள் ஆகி, அது இன்றையதினம் செய்திருக்கும் வேலை என்னவென்று பார்த்தால் அரசாங்க சம்பந்தமான உத்தியோகங்களை ஒன்றுக்கு 10 ஆகப்பெருக்கி அவ்வுத்தியோகங்களுக்கெல்லாம் சதா வேலை இருக்கும்படியாக அநேக புதியபுதிய அதிகாரங்களை உண்டாக்கி அவ்வுத்தியோகங்களும் அதிகாரங்களும் மக்களுக்கு சதா தேவையாய் இருக்கும்படியாக மனித வாழ்க்கையையும், குணங்களையும், ஒழுக்கங்களையும் திருப்பி இதன் பயனை முன் சொல்லப்பட்ட உயர்ந்த ஜாதியார் என்னும் எல்லாப் பார்ப்பனர்களும் படித்தவர்கள் என்னும் பார்ப்பனரல்லாதாரும் போட்டி போட்டு வாழும்படியாக ஏற்பட்டதல்லாமல் நாட்டிற்கோ, நாட்டு பெரும்பான்மையான மக்களுக்கோ ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கின்றதா என்பதை சிறிதாவது கவனித்தால் நாம் கூறுவதின் உண்மை நன்றாக விளங்கும். அன்றியும் இன்றைய தினமும் தேசியம் என்பதின் பேரால் உள்ள காங்கிரஸ் என்னும் கூட்டத்திற்கோ இயக்கத்திற்கோ தேசியம் என்னும் தேச சம்பந்தமான நன்மைகளைப் பொறுத்த கொள்கைகள் என்ன என்று பார்ப்போமானால் கூட அவை பெரிதும் உத்தியோகங்களையும், அதிகாரங்களையும் பொறுத்ததாகவே இருக்கின்றதே தவிர வேறு என்ன என்று பார்த்தால் அதன் மூலமும் உண்மை விளங்கும். ஒரு தேசத்தின் தேசியம் முக்கியமாய் எதைப் பொறுத்திருக்கவேண்டும் என்று பார்ப்போமானால் குறைந்தபக்ஷம் ஒரு தேச மக்கள் தங்களது மனத்தையும் மனசாக்ஷியையும் விற்காமலும் விட்டுக் கொடுக்காமலும் வயிறு வளர்க்கும்படியாகவாவது இருக்க வேண்டும். ஈதன்றி அதற்கு மேற்பட்ட தேசியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அறிவு வளர்ச்சி வேண்டும், கல்வி வேண்டும், ஆராய்ச்சி வேண்டும், கண்ணியமான தொழில் வேண்டும், சமத்துவம் வேண்டும், ஒற்றுமை வேண்டும், தன் முயற்சி வேண்டும், உண்மை உணர்வு வேண்டும், ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்காமலிருக்க வேண்டும், சோம்பேறிகள் இருக்கக்கூடாது, அடிமைகள் இருக்கக்கூடாது, தீண்டாதவர்கள் தெருவில் நடக்கக் கூடாதவர்கள் முதலியவர்கள் இருக்கக்கூடாது, இனியும் இது போன்ற எவ்வளவோ காரியங்கள் செய்யப்படவேண்டும்.

## தேசியம் செய்ததென்ன ?

ஆனால் இவைகளில் எதனையேனும் இந்த ஐம்பது வருஷத்திய தேசியம் செய்திருக்கின்றதா என்று பொது தேசியத்தலைவர்களையும், தனித்தனி தேசியக் கட்சித் தலைவர்களையும், இவைகளில் சம்பந்தப்பட்ட தேசபக்தர்களையும், தேசத் தொண்டர்களையும் கேட்கின்றோம். இந்த ஐம்பது வருஷ காலமாக உத்தியோகப் பெருக்குக்கும், அதிகாரப் பெருக்குக்கும், அவற்றிற்கு ஏற்பட்ட போக்கியதா பக்ஷ பெருக்குக்கும், சம்பளப் பெருக்குக்கும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான திட்டங்கள் கொண்ட சட்டங்கள் தேசியத்தின் பேரால் நிறைவேற்றப்பட்டிருப்பது போல், உண்மையாகவே தேச நன்மைக்கேற்றதான மேலே குறிப்பிட்டவைகள் விஷயத்தில் ஏதாவது சட்டம் செய்ய இந்த தேசிய இயக்கமோ, தேசியத் தலைவர்களோ ஒரு சிறிது முயற்சியாவது செய்து சட்டம் செய்தார்களா? செய்ய முற்பட்டார்களா? என்று கேட்பதுடன், அவ்விதசட்டம் செய்ய முன்வந்த வேறு கனவான்கள் முயற்சிக்காவது முட்டுக்கட்டை போடாமல் இருந்தார்களாவென்று கேட்கின்றோம். பட்டினங்களிலுள்ள பொதுக் கிணறுகளில் சக்கரவர்த்தியின் குடிகளும், இந்நாட்டுப் பழங்குடிகளும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு மிக்க அவசியமான சமூகமுமான ஆதித்திராவிட மக்கள் என்போர் தாகத்திற்கு தண்ணீர் மொள்ளுவதற்கு இந்த நாட்டில் இனியும் சட்டம் செய்துதான் அமுலில் கொண்டுவரவேண்டியிருப்பதுடன் அவ்வித சட்டம் இதுவரை எந்த தேசிய வாதியாலும் கொண்டுவரப்படாமல் இருப்பதுடன் தேசியவாதி அல்லாதவர் என்பவரால் (திரு. வீரையன் அவர்களால்) கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கு தேசிய வாதிகளின் எதிர்ப்பில்லாமலும் இருக்க முடியவில்லை. சென்ற மாதத்திலும் சென்னை சட்ட சபையில் கிராமப் பொதுக் கிணறுகளில் பொது மக்கள் யாவருக்கும் தாகத்திற்கு தண்ணீர் மொண்டு குடிக்க உரிமை வேண்டுமென்று ஒரு தேசிய வாதி அல்லாதார் என்கின்றவரால்தான் சட்டம் கொண்டுவர முடிந்ததே தவிர வேறில்லை. அப்படி இருந்தும் அந்த சட்டத்தையும் தேசிய வாதிகள் எதிர்க்காமலிருக்கவில்லை. தேசிய வாதிகள் தயவால் மந்திரியாகி தேச மக்கள் பணத்தில் தேச மக்கள் பேரால் மாதம் ஒன்றுக்கு 5,000 ரூபாய் சம்பளம் வாங்கினவரும், சுயாட்சி சங்கத்தைச் சேர்ந்தவரும், ஜாதி வித்தியாசமே இல்லாததும் "தினம் தினம் கடவுள்களுடனும் மகாத்மாக்களுடனும் சம்பாஷணை செய்துகொண்டிருக்கும்" சங்கமாகிய பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவருமான திரு. ரங்கநாத முதலியாரால் ஆட்சேபிக்கப்பட்டதுடன் அவ்வாட்சேபணைக்கு அவர் சொன்ன காரணம் என்னவென்றால் இந்

தச் சட்டம் நிறைவேறினால் தேசத்தில் அடிதடி கொலைகள் முதலியவைகள் ஏற்பட்டுவிடும், ஆதலால் கூடாது என்று சொன்னாராம். இதை திருவாளர் சத்தியமூர்த்தி முதலிய பச்சை 'தேசியவாதிகள்' ஆதரித்தார்களாம். தேசிய இயக்கயோக்கியதைக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்றுதான் கேட்கின்றோம். தவிரவும், குழந்தைகள் விவாகங்களையும் குழந்தைகளைப் புணர்ச்சிசெய்வதையும் தடுக்க இதுவரை எந்த தேசியவாதியும் சட்டம் செய்யவேயில்லை. தேசியவாதி "அல்லாதவரா"ல் தான் இதற்கும் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் அந்த சட்டத்தையும் எதிர்க்க பச்சைத் தேசிய வாதிகளான திருவாளர்கள் சத்தியமூர்த்தி, சீனிவாசய்யங்கார், வெங்கட்டரமணய்யங்கார், சேஷய்யங்கார், எம். கே. ஆச்சாரியார், துரைசாமி அய்யங்கார் முதலாகிய "இந்திய தேசியப் பிரதிநிதிகளே இன்று கச்சை வரிந்து கட்டிக் கொண்டு முன்னணியில் நிற்கின்றார்கள். மக்கள் ஜாதி பேதத்தையும், மத பேதத்தையும் ஒழிக்க தேசியவாதிகள் கவனிக்காமலிருப்பது மாத்திரமல்லாமல் அவற்றை நிலைநிறுத்தவும் வலுப்படுத்தவும் முயற்சிக்காமலிருப்பதுமில்லை. இன்றைய தேசிய வாழ்வில் தேவஸ்தான மசோதாவை எதிர்த்தவர்கள் யார்? சாமிகள்பேரால் பெண் மக்கள் விபசாரத்தைத்தடைபுரியும் மசோதாவை எதிர்த்தவர்கள் யார்? மக்கள் எல்லோருக்கும் சமப்பிரதிநிதித் தத்துவமும் சம சந்தர்ப்பமும் அளிக்கவேண்டும் என்னும் கொள்கைகளை எதிர்ப்பவர் யார்? இவைகளை முந்தியவர்கள் யார்? என்ற விபரங்களை கவனிப்போமானால் "தேசத்துரோகி"கள் என்பவர்களால் மசோதாக்கள் கொண்டு வரப்படுவதும், "தேசியவாதிகள்" என்பவர்களால் எதிர்க்கப்படுவதுமாயிருக்கின்றதேயல்லாமல் வேறு என்னவென்று தான் கேட்கின்றோம்.

**'தேசீயம்' ஓர் முட்டுக்கட்டையே**

கடைசியாக செங்கற்பட்டு மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் யாரால் கொண்டு வரப்பட்டது? இப்போது அவைகள் யாரால் எதிர்க்கப்படுகின்றது? என்று பார்த்தால் அவ்வளவும் தேசிய வாதிகள் என்பவர்களாலேயே எதிர்க்கப்படுவதைக் காணலாம். இவைகள் தான் போகட்டுமென்று பார்த்தாலும் இந்திய தேசிய முன்னேற்றத்திற்கு ஒத்துழையாமையைத் தவிர வேறு வழி இல்லையென்று திரு. காந்தியால் சொல்லப்பட்டு இந்திய தேசிய இயக்கங்களும் ஒப்புக் கொள்ளப்பட்டு நடைமுறையில் கொண்டுவந்து பல ஆயிரக்கணக்கானவர்கள் ஜெயிலுக்கும் போய் தங்கள் உடலையும், பொருளையும், ஆவியையும் விடத் தயாராயிருந்த காலத்தில் அதை பாழ்ப்படுத்தினவர்கள் யார்? என்று கேட்கின்றோம்.

இன்றைய தினம் தேசியத் தலைவர்களாயிருக்கும் திருவாளர்கள் மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு முதலிய இந்திய தலைவர்களும் சென்னை தேசியத் தலைவர்கள் என்னும் திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், கலியாணசுந்தர முதலியார், வரதராஜுலு முதலாகியவர்களும் ஒத்துழையாமை சட்ட விரோதமென்றும், ஒத்துழையாமை அசட்டுத்தனம் என்றும், இரட்டைச்சுழற்றினால் சுயராச்சியம் வந்துவிடாது என்றும், வகுப்பு வித்தியாசமுள்ள இடத்தில் ஒத்துழையாமை பலியாதென்றும் காந்திக்கு மூளையில்லை, காந்தி தேசியத் தலைமைக்கு லாயக்கில்லை என்றும் சொல்லிக்கொண்டு, ஒத்துழையாமையை அழிப்பதற்கென்றே தோற்றுவிக்கப்பட்ட சுயராச்சியக் கட்சியை ஆதரித்து அதில் சிலர் திருட்டுத்தனமாய்ச் சேர்ந்துகொண்டு சிலர் கைக்கூலி வாங்கிக்கொண்டு ஆதரித்து ஒத்துழையாமையை ஒழித்துவிடவில்லையா என்று கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட யோக்கியர்கள்தானே இன்று நம்மையும் சுயமரியாதை இயக்கத்தையும் சர்க்காருடன் ஒத்துழைப்பவரென்றும், தேசியத்திற்கு விரோதமான கட்சியென்றும் சொல்லுகின்றார்களே யொழிய வேறு உண்மையான யோக்கியர்கள் யாராவது சொல்லுகின்றார்களா? அன்றியும் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் தேசத்தின் பேரால் தேசியத்தின் பேரால் ஏதாவது ஒரு ஒத்த யோக்கியமான தலைவர் இருக்கின்றாரா? என்று கேட்கின்றோம்.

**தலைவர்களின் 'பெருமை'**

திரு. காந்தியின் நிலைமையோ அவர்தானே தன்னை மனப்பூர்வமாக யோக்கியர் என்று சொல்லிக்கொள்ள முடியவே முடியாது. தேசியம் என்பதின்பேரால் அவர் போட்ட குட்டிக்கரணங்கள் எண்ணித்தொலையாது. அவருடைய வியாக்கியான வித்தியாசங்கள் கணக்கிலடங்காது. இன்றையத்தினம் எந்தவிதமான அயோக்கியத் தன்மையும் நாணயமற்றதுமான தீர்மானங்களை காங்கிரசிலும், மற்ற கூட்டங்களிலும் நிறைவேற்றவேண்டுமானாலும் தேசியத் தலைவர்களுக்கு திரு. காந்தியைத்தான் உபயோகப் படுத்திக் கொள்ள முடிகின்றது. ஆனால், அவர் பேச்சையும் கேட்க ஆட்களைக் காணோம். திரு. மோதிலால் நேருவோ அரசியலை சூதாட்டம் என்றே கருதி இருப்பதோடு சட்டசபைகளில் காலிகளை விட்டே மோசமாய் நடந்து கொள்ளுகின்றவர். எந்தக்காரியம் செய்வதனாலும் அவருக்கு உத்தியோகத்திலும் அதிகாரத்திலும், கட்சித் தலைமையிலும் கண்ணே தவிர, நாட்டின் நன்மைக்கேற்ற திட்டம் இன்னது என்பதே அவர் தேசியத்தில் கிடையாது. அவர் குமாரர் ஜவகர்லால் நேருவோ வாயளவில் பூரண சுயேச்சை; காரிய அளவில் காங்கிரஸ் தலைமை. மற்றபடி நடைமுறைக்கு அவரிடம் யாதொரு கொள்கையும் கிடையாது. பம்பாய் மாகாணத்து தலைவர்களான மராட்டியப்பார்ப்பனர்கள் சங்கதி யாவருக்கும் தெரிந்ததேயாகும். கல்கத்தா மாகாணத்து தலைவர்கள் திருவாளர்கள் சென்குப்தா, போஸ் முதலியவர்கள் நம் நாட்டுத் திரு. ஆதிநாராயணஞ் செட்டியாரை தோற்கடிக்கக் கூடிய தேசிய வாதிகளாவார்கள். பஞ்சாப் மாகாணத் தலைவர்கள் யோக்கியதை காங்கிரஸ் வரவேற்புக்கூட்டத்தில் தலைவர்தேர்தலில் நடந்துகொண்ட மாதிரியிலேயே அவர்கள் யோக்கியதையும் அவர்களுக்கு அங்கிருக்

## முஸ்லிம் கனவான்களுக்கு ஒரு வேண்டுகோள்

"மானம் போவதைக் காட்டிலும் ஜீவன் போவது உத்தமம்." ஆகையால் ஆதிதிராவிடர்களாகிய எங்களுக்கு இவ்வுலகில் பிறப்புரிமை இல்லாமல் மிருகங்களைப்போல் மதிக்கப்படுவதைக் காட்டிலும் மடிந்துபோவது உத்தமம். அல்லது இந்த ஜென்மத்தில் எங்களைப் பிடித்திருக்கும் தீண்டாமை என்னும் பிசாசை ஒழிக்க வழி தேட வேண்டும். கிறிஸ்தவர்களான போதிலும் தீண்டாத கிறிஸ்தவன், முதலியார் கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவன் என்கிறதொல்லை இருக்கிறது. பெண் கொடுத்தல் பெண் வாங்குதல் முதலானவையும் ஜாதிப் பிரிவுப்படி நடக்கின்றன. ஐயோ! ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவ மார்க்கத்தை எடுத்துக் கொண்டாலோ, இந்து மதத்தை விட மோசமாக இருக்கிறது. எங்களைக் காரில் ஏறக்கூடாதென்றும், வீதி வழியே போகக் கூடாதென்றும், தொடக் கூடாதென்றும் கொடுமை செய்துவரும் கொலை பாதக இந்துக்களை அடக்க இஸ்லாம் மதத்தில் வருவதைக் காட்டிலும் வேறு வழி இல்லை என்பது திண்ணம். தற்காலம் ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியினால் ஆதிதிராவிடர்களுள் சிலர் காட்டில் அலைந்து திரியும் பக்ஷிகளைக்கூட்டில் பிடித்து அடைத்து வைத்தால் எவ்வாறு அவஸ்தைப்படுமோ அதுபோல் ஜாதிக் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து வெளிவர அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாகரிகமும், ஜாதி வித்தியாசமும் இல்லாத இவ்விவாதத்தில் நீங்கள் முஸ்லிம் சங்கங்கள் ஏற்படுத்தி வெள்ளைக்காரர்களை முஸ்லிம்களாக்க முயற்சி செய்யும்போது நாங்கள் ஹிந்துக்களோ அல்லது எந்த மதத்தைச் சேர்ந்தவர்களோவென்று நிலைதெரியாமல் அலையும் ஆதிதிராவிடர்களை ஏன் முஸ்லிம் மதத்திற்கு வரத் தகுந்த ஏற்பாடு செய்யக்கூடாது? நான் மாத்திரமல்ல, இன்னும் அநேக ஆதிதிராவிடர்களை முஸ்லிம்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். முஸ்லிம் கனதனவான்களே! நீங்கள் இனி அயர்ந்து இருக்க வேண்டாம். நீங்கள் நம்பும். உங்கள் அல்லா (ஹ்) உங்களுக்கு வழியைத் திறந்துவிடப் போகிறான்.

அநேக இடங்களில் சங்கங்கள் ஏற்படுத்திப் பிரசங்கத்தின் மூலமாயும், நோட்டீஸ்கள் மூலமாயும் இஸ்லாம் மதத்திற்கு வருவதன் நன்மையையும் இந்து மதத்திலிருக்கும் கொடுமையையும் எடுத்துக் காட்டுங்கள். இது விஷயத்தில் முன் வரும் கனதனவான்களுக்குத் தக்க உதவி செய்யத் தயாராக இருக்கிறேன்.

இப்படிக்கு,
எம். சாமிநாதன்.

கும் மதிப்பும் நன்றாய் விளங்கும். மற்றும் சென்னை மாகாணத் தேசிய தலைவர்கள் யோக்கியதை சொல்லவே வேண்டியதில்லை. வகுப்பு வாரியாக தலைவர்கள் இருந்தாலும் அதாவது பார்ப்பனரில்; அய்யங்காருக்கு பிரதிநிதி திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்கார், எ. ரங்கசாமி அய்யங்கார்; அய்யருக்கு திரு. எஸ். சத்தியமூர்த்தி; பார்ப்பனரல்லாதாருக்கு திருவாளர்கள் திரு. வி. கலியாணசுந்திர முதலியார், ஓ. கந்தசாமி செட்டியார், பி. வரதராஜுலு, முத்துரங்க முதலியார், மயிலை ரத்தினசபாபதி முதலியார்; மகமதியர்களில் ஜனாப்கள் அமீத்கான் சாயபு, ஷாபி மகமது சாயபு; கிறிஸ்தவர்களுக்கு, திரு. குழந்தை; தீண்டாதவர்கள் என்பவர்களுக்கு திரு. ஜயவேலு; ஆகிய இவ்வளவு பேர்களுடனேயே சென்னை தேசியத் தலைமை அடங்கிவிட்டபோதிலும் இவர்கள் ஒவ்வொருவர்களின் யோக்கியதையும் நிலைமையும் நாம் சொல்லுவதைவிட அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வதைக் கொண்டு அறிவதே கூடுமானவரை உண்மையாகவும் சுலபத்தில் அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்குமென்றே கருதி விட்டுவிடுகின்றோம். இவர்களது கொள்கைகளோ, திரு. சீனிவாசய்யங்காருக்குப் பூரண சுயேச்சை; அதற்குள் உத்தியோகம் வேண்டாமென்பதற்கு ஒரு கட்சியும், உத்தியோகங்கள் எல்லாவற்றையும் கைப்பற்ற ஒரு கட்சியும் வேண்டும். ஆனால், தானும் தன் மகனும் வக்கீல் வேலையில் மாதம் 15,000 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்துக் கொண்டுமிருக்க வேண்டும். திரு. எ. ரங்கசாமி அய்யங்காருக்கோ நேரு திட்டத்தை ஆதரிப்பது என்பது வாய்வார்த்தையில்; எப்படியாவது பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம் தொலைய வேண்டுமென்பது, உள் எண்ணத்தில். 'இந்து' பத்திரிகையும், 'சுதேசமித்திரன்' பத்திரிகையும் தேசியத்தின் பேரால் பார்ப்பனப் பிரசாரமும் செய்துமாதம் 1-க்கு ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாய் சம்பாதிப்பதுடன் தங்கள் பிள்ளைகுட்டி அண்ணன், தம்பி, மாமன், மருமகன், எல்லோருக்கும் பெரிய பெரிய உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பது ஆகியவைகள் காரியத்தில்.

திரு. சத்தியமூர்த்திக்கோ திரு. சீனிவாசய்யங்கார் சொற்படி ஆறு மாதம், திரு. ரங்கசாமி அய்யங்கார் சொற்படி ஆறு மாதம்; ஓய்வு நாட்களில் பார்ப்பனீயத்திற்குக் கெடுதியில்லாமல் பார்த்துக்கொண்டு, மற்றபடி பணம்கொடுப்பவர்கள் சொற்படியெல்லாம் நடப்பதேயாகும். மற்றும் பணத்தின் அளவுக்குத் தகுந்தபடி யாரையும்காலித்தனமாக வைதுவிட்டு அடிக்கடி மன்னிப்புக் கேட்டுக்கொள்வதும் ஆகியவைகளைத்தவிர வேறொன்றும் கிடையாது.

திரு. கலியாணசுந்தர முதலியாருக்கு வாயில் காந்திபடிகள் திட்டம், மனதில் புராண புஸ்தகவிற்பனை, காரியத்தில் பார்ப்பனரல்லாதாருக்கு இடையூறாக பார்ப்பனருக்கு பிரசாரவேலை செய்வதுமேயாகும்.

திரு. வரதராஜுலுவுக்கோ வாயில் (குறிப்பிட்ட கொள்கையல்லாத) தேசியம் என்கின்ற கூச்சலும், அதற்கு சகல உத்தியோகத்தையும் கைப்பற்ற வேண்டும் என்கின்ற திட்டமும், மனதில் தான் ஒரு மந்திரியாக வேண்டும் என்கின்ற கனவும், காரியத்தில் பத்திரிகையும் மின்சார ரசம் விற்பனையில் பணம் தேடுவதுமேயாகும். மற்றவர்களுக்கோ சொந்தத்தில் ஒரு அபிப்பிராயமுமில்லாமல் திரு. அய்யங்கார் வீசிய கல்லை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்துக் கொண்டே இருப்பது. இவர்கள் இத்தனைபேர்களும் தனித்தனியாகவே சேர்ந்தோ சுயமரியாதை இயக்கத்தையும், சீர்திருத்தத்தையும் எதிர்த்து பொதுவில் பார்ப்பன பிரசாரம் செய்வதில் மாத்திரம் அபிப்பிராயபேதமே கிடையாது என்றுசொல்லலாம். மற்றபடி நாட்டில் தேசியத்திற்கு போக்கியதையோ; அகில இந்திய காங்கிரசிக்கு தலைவர் தேர்தல்களில் ஏற்பட்ட சம்பவங்களும், தலைவர் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் யோக்கியதையும், அவர்கள் மறுப்பதும், ஆகியவைகளோடு திரு. காந்தி தலைமைப்பதவி வேண்டாம் என்பதற்கு சொல்லும் காரணங்களும், ஆகியவைகளை கவனித்தால் அதன் யோக்கியதை விளங்காமல் போகாது. திரு. காந்தியவர்கள் காங்கிரசு யோக்கியமான நிலையில் இல்லை என்றும், தான் சொல்வதை யாரும்கேட்கமாட்டார்கள் என்றும், காங்கிரசு விளையாட்டுப் பிள்ளைகள் கூட்டமாகவும் நடவடிக்கை யாகவும் போய்விட்டதென்றும், தான் தலைமை வகிப்பதால் யாதொரு பலனும் ஏற்படாதென்றும் சொல்லி இருக்கிறார். மற்றபடி திரு. காந்தியால் சிபார்சு செய்யப்படும் தலைவர் திரு. ஜவஹரலாலோ மூன்றாவதாக குறைந்த ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அன்றியும் மற்றொரு காங்கிரசிற்கு தலைமை வகித்தவரும், சென்னைகாங்கிரசுக்கமிட்டி தலைவரும், எல்லா இந்தியத்தலைவர்களில் ஒருவருமான திரு. சீனிவாச அய்யங்காரால் முட்டாள் என்றும், அதிகப்பிரசங்கி என்றும்பட்டம்பெற்றவர். அடுத்தாப்போல மாகாண காங்கிரஸ் மகாநாடுகளைப்பற்றியோ வென்றால், தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாடு மூன்று வருடங்களாய் கூட்டப்படுகின்றது. இன்னும் முடிக்கபாடில்லை. இந்த வருடம் நடத்துவதிலும் அதற்கு இந்த மாகாணத்தில் தலைவர் கிடைக்கவில்லை. சட்டத்திற்கு விரோதமாக வெளி மாகாணத்திலிருந்து கொண்டுவரப்பட வேண்டியதாகிவிட்டதென்றாலும் அதற்கும் ஆள் கிடைக்காமல் திரு. சி. ராஜகோபாலாச்சாரி சூட்சியின் பேரில், திரு. காந்தியின் பிரயத்தனத்தின் பேரில், திரு. படேல் அனுப்பப்பட்டிருக்கின்றார் என்றாலும், அவரும் ஒப்புக்கொள்ளுவதில்லை என்று மறுத்துவிட்ட பிறகு தங்களது சொந்த கௌரவம் போய்விடுமே என்று தனிப்பட்டமுறையில் சிலர் கெஞ்சிக்கூத்தாடி அழைத்து வந்திருக்கிறார்கள். ஆனால், மகாநாட்டிற்கு மற்ற "தேசியத் தலைவர்கள்" போவதில்லை என்று இப்போதே சொல்லி விட்டார்கள். அப்படி இருந்தும் தலைவர்கள் வந்தால் தக்க மரியாதை கிடைக்குமென்று "தேசியத்தொண்டர்கள்" எச்சரிக்கையும் செய்து மிரட்டி இருக்கின்றார்கள். காங்கிரசுக்குத் தலைமை வகிக்க திரு காந்தியால் பிரேரேபிக்கப்பட்ட திரு. ஜவஹரலாலின் கொள்கையான பூரண கட்சித் தீர்மானத்தை தமிழ்நாடு தேசிய மகாநாட்டில் யாரும் பிரேரேபிக்கக் கூடாது என்று தலைவர் திரு. படேல் வாக்குத்தத்தம்வாங்கிக்கொண்டு பிறகுதான் வந்திருக்கின்றார். இதனால் திரு சீனிவாசய்யங்கார் மகாநாட்டுக்கு வருவதில்லை என்று சொல்லிவிட்டார். திரு. வரதராஜுலு ஆதலால் நானும் வருவதில்லை என்று சொல்லிவிட்டார். இந்தநிலைமையில்தான் இன்றைய தமிழ் மாகாணம் இருக்கின்றது.. இவ்வளவும் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தும் திரு. காந்தியோ 1929வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதி இரவு பன்னிரண்டு மணி ஒரு நிமிஷத்திற்கு மறுபடியும் ஒத்துழையாமை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லுகின்றார்!!!

எனவே, இந்த விவரங்களுக்கு மேல் தேசியத்தினுடைய, தேசிய இயக்கத்தினுடைய, தேசியத் தலைவர்களுடைய, நிலைமை செல்வாக்கு ஆகியவைகளினுடைய, யோக்கியதையை அறிய வேண்டுமென்று யாராவது ஆசைப்பட்டால் அவைகளை மறுபடியும் ஒருமுறை எழுதுவோம்.

# திருவாங்கூரில் கோஷா விலக்கம்

வைதீகச் செருக்கும், பார்ப்பனீயக் கொடுமையும், இராம ராஜ்ய பரிபாலனமும் தலைவிரித்தாடும் திருவாங்கூரில், முதற்றரப் பார்ப்பனர்களாய நம்பூதிரிகளின் பெண்டிர் பர்தாவைக் கடந்து வெளியேறியிருக்கின்றனர். பர்தா என்பது ஒரு சமூகத்தின் மடமைக்கும், அம் மடமைக்கு அடிப்படையாய் உள்ள மதக்கோட்பாடுகள், சமூகக் கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் இவைகளின் அறிகுறியாய் நிலவுகின்றது. ஆடவர்களும் வெளிச்செல்லும் உரிமை பெற்றிருக்கையில் மானிடப் பெண்கள் தம் கொழுநர் தம் வீடுகளில் சிறகிலாப் பறவைகளைப்போல் அடைக்கப்பட்டு வருகின்றனர். இதனைக் கடந்து வெளிச்செல்வதென்றால், மடமையே உருவமாக விளங்கும் ஒரு சமூகத்தில் எளியதோர் செயலன்று. நம் இயக்கத்தின் நற்பயனாக, நம் தலைவர் அடிக்கடி அந்நாட்டுக்குச் சென்று சமத்துவக் கொடியை பறக்கச் செய்துவரும் அரும்பெரும் அறிவுரை மாரிகளின் பயனாக, நம்பூதிரிப் பெண்களின் சமூகத்தில் சுயேச்சையும், சமத்துவமும் காட்டுத் தீப்போல் பற்றிக்கொண்டது. நம்மியக்கக் கதிரொளியால் அறியாமைப்பனி அக்கணமே அகன்று வருகின்றது. ஏனைப்பெண்டிரும் இதனை தக்கோர் வழிகாட்டியென மதித்து முன்வருமாறும், ஆடவர்கள் தடைபுரியினும் அதற்கிடங்கொடாமல் தமது சுயமரியாதையை நிலைநாட்டுமாறும் நாம் மகிழ்வுடன் எதிர் பார்க்கின்றோம்.

## திருவாங்கூர் இளைஞர் முதல் ரிவோல்ட் மகாநாடு

### திரு. ஈ. வெ. ராமசாமியார் தலைமை வகிப்பார்

அகில திருவாங்கூர் இளைஞர் ரிவோல்ட் முதல் மகாநாடு ஒன்று கூட திருவாங்கூரில் 15-9-29ல் திரு. ஈ. வெ. ராமசாமியார் தலைமையில் நடைபெறும்.

னம் சொல்லி மாலையிட்டு கூட்டம் 9 மணிக்கு முடிவுபெற்றது.

### ஞாபகக் குறிப்பு கூட்டமும் விருந்தும்

பிறகு ஈண்டு முதலாளி ஜனுப் ஷேக் தாவுத் சாயபு அவர்கள் பங்களாவில் இரவு 9-30 மணிக்கு திரு ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தலைமையில் கோயமுத்தூர் ஜில்லா பிரபலஸ்தர்கள் சுமார் 100 கனவான்கள் கொண்ட கூட்டம் ஒன்று நடந்தது.

அக்கூட்டத்தில் கோவை ஜில்லா தலைவரும் நகர சேர்மெனுமான திரு. சி. எஸ். இரத்தின சபாபதி அவர்களுக்கு அவரது பொது நல சேவைக்கு இச் ஜில்லா வாசிகள் மதித்து அவருக்கு ஒரு ஞாபகக் குறிப்பு ஏற்படுத்துவது என்ற தீர்மானத்தை திரு.பட்டக்கார எஜமானர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு சமத்தூர், மெய்வாடி முதலிய ஜமீன்தார்களால் ஆமோதிக்கப்பட்டு மற்றும் பலபிரபலகனவான்களால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது இக்காரியத்தை நிறைவேற்றிப் பிரபல கனவான்கள் கொண்ட கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டது.

பிறகு சுமார் 300 பேர்களுக்கு மேலாக சைவம் வைணவம் ஆகிய இரண்டு வித சாப்பாடுகளும் நடந்தது. அன்றிரவு திரு. ஏ ராமசாமி அவர்கள் சென்னைக்கும் திரு. ஈ வெ. ராமசாமி மதுரைக்கும் பிரயாணமாகி விட்டார்கள். மறுநாள் காலையிலும் பகலிலும் திரு ரங்கராஜுலு செட்டியார் அவர்கள் வீட்டில் ஒரு பிரபல விருந்து நடைபெற்றது. அதற்கும் அநேக கனவான்கள் விஜயம் செய்திருந்தார்.


## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்

வருட சந்தா தபால்கூலி யுள்பட

உள்நாடுகளுக்கு ரூபா 1-0-0

வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.
(5)


(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திரு. ஷண்முகம் அவர்கள்தான் 20 வருடகாலமாகவே சுயமரியாதைக் கொள்கைகளை கைக்கொண்டு வந்திருப்பதாகவும், அவைகள் அனேகமத நூல்களிலும், பெரியோர் வாக்கியங்களிலும் பொதிந்து கிடக்கின்றன வென்றும், ஆனால் அவைகளை திரு. ஈ வெ. ராமசாமியே தைரியமாய் வெளியிலெடுத்துச் சொல்லி பிரசாரம் செய்யப் புறப்பட்டாரென்றும், தான் அச்சுயமரியாதைக் கொள்கைகள் முழுவதையும் முழுமனதுடன் ஆதரிப்பதாயும், அவ்வியக்கம்தான் உண்மையான தேசிய இயக்கமென்றும், தேச மக்கள் விடுதலைக்கு தான் காங்கிரஸைவிட இதையே அதிகமாய் நம்பி இருப்பதாகவும் திரு. ஈ. வெ. ராமசாமி நாஸ்திகர் என்றால் தானும் நாஸ்திகரென்றும் இவ்வியக்கத்தை எதிர்க்கும் இயக்கங்கள் தேசத் துரோக இயக்கமென்றும், சமூகத் துரோக இயக்கமென்றும், விடுதலைத் துரோக இயக்கமென்றும் சொல்லி பள்ளிக்கூடத்தைத் திறந்துவைத்தார். பிறகு காரைக்குடி சின்னையா அவர்கள் தலைவர்களுக்கு வந்தனம் சொன்னார். பிறகு ஈ. வெ. ராமசாமியார் இப்பள்ளிக்கூடத் திறப்பு விழாவுக்காகதான் யாருக்கும் தனிப்பட அழைப்பு அனுப்பவில்லை என்றும், பத்திரிகைகளில் பிரசுரித்ததையே கவுரவித்து ஆண்பெண் இவ்வளவு பெயர்கள் விஜயம் செய்திருப்பது இவ்வியக்கத்தில் தங்களுக்கு உள்ள அன்பையும் பற்றுதலையும் காட்டுகின்றதென்றும் சொல்லி தலைவர்களுக்கு மாலையிட்டார்.

### மாலை சிற்றுண்டியும் முனிசிபல் உபசார பத்திரமும்

பள்ளிக்கூடத் திறப்புவிழா முடிந்ததும் தங்கிருந்து நேரே மகாஜன ஹைஸ்கூலைச் சேர்ந்த சரஸ்வதி விலாச மண்டபத்தில் பள்ளிக்கூட காரியதரிசியாகிய திரு. மு. சிக்கய்ய நாயக்கரால் ஒரு பெரிய சிற்றுண்டி விருந்து நடத்தப்பட்டது. அதற்கும் சுமார் 500 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். அது முடிந்ததும் முனிசிபல் சேர்மென் திரு. பால சுப்பராயலு நாயுடு அவர்கள் தலைமையில் தலைவர்களுக்கு ஈ. வி. நஞ்சப்பசெட்டியாரால் முனிசிபல் உபசாரப்பத்திரமும், சிக்கய்ய நாயக்கரால் பள்ளிக்கூட உபசாரப்பத்திரமும், எட்மாஸ்டர் திரு ஸ்ரீனிவாச அய்யங்காரால் உபாத்தியாயர் சங்க உபசாரப்பத்திரமும் திரு. மொட்டையப்ப முதலியாரால் செங்குந்தர் சங்க உபசாரப் பத்திரமும் திரு. குருசாமியல் மாணவர் கல்விக்கழக உபசாரப்பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தலைவர்கள் மூவர்களும் வரிசையாக உபசாரத்திற்கு பதிலளிக்கும் முறையில் அருமையான உபதேசங்கள்கொண்ட உபந்யாசங்கள் செய்தார்கள். பிறகு திரு.ஈ.வெ. ராமசாமி தலைவர்களுக்கும் வந்திருந்தவர்களுக்கும் வந்த

## தேவை.

தஞ்சாவூர் தாலூகா போர்டு பாடசாலைகளுக்குப் போதனா முறை பயின்று தேறிய உபாத்தியாயினிகளும், உபாத்தியாயர்களும், ஹிந்துஸ்தான் முனிஷிகளும், திருக்காட்டுப்பள்ளி போர்டு ஆதிதிராவிடப் பாடசாலைக்குப் போதனாமுறை பயின்று தேறிய (செகண்டரி கிரேடு) தலைமை உபாத்தியாயர் ஒருவரும் தேவை. சம்பள விகிதம் கீழ்க்கண்டவாறு:—

5-9-29-க்குமேல் அனுப்பப்படும் மனுக்கள் கவனிக்கப் படமாட்டா.

| | உபாத்தியாயர்கள். | உபாத்தினிகள். |
|---|---|---|
| செகண்டரி கிரேடு | 35—1½—50 | |
| ஹையர் கிரேடு | 20—1—25 | 25—1—30 |
| லோயர் கிரேடு | 15—1—20 | 20—1—25 |


தஞ்சாவூர் தாலூகா போர்டு கச்சேரி
தேதி 16—8—1929

த. வே. உமாமகேசுவரம்,
தலைவர்.


இனாம்! லீவர் பாக்கெட் வாச் இனாம்!!

குறைந்த விலை ரூ. 3-15-0. (இம்மாதம் வரைதான்)

W. B. பவுண்டன்பேனா No. 12.




இப்பேனா இங்கிலாந்து தேசத்தில் தயார்செய்து. ஒயிட் மிமோரியல் ஹால் எக்ஸிபிஷனுக்கு அனுப்பி மாட்சிமை தங்கிய 5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தியார் பரிசோதித்து, 1926ஸுத்தில் டெயிலி மெயில் பத்திரிகையிலும் பிரசுரம் செய்திருப்பதால் இதைப் பிரபல்யம் செய்வதற்காகவே லீவர் வாச இனாமளிக்கப்படும். நீடித்த காலம் உழைக்கும். வாச்சுக்கு 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள். கைவசம் கொஞ்சம்தான்.

SWISS WATCH CO, (E) PAREL BOMBAY. (12)
(29) சுவிஸ் வாச் கம்பனி, பேரேல், பாம்பே.


## செய்தித் திரள்.

மதுரை வாலிப நாடார் சங்கம்:- மதுரை கீழமாசி வீதி மொட்டை விநாயகர் சத்திரத்தில் மதுரை வாலிப நாடார் சங்கத்து ஆண்டுப் பூர்த்தி விழா ஆவணி இரண்டாவது வாரத்தில் நடைபெறுமென்றும், அது காலை திரு. திரிகூடசுந்திரம் பிள்ளை அவர்கள் தலைமை வகிப்பாரென்றும், திரு. சொ. முருகப்பர், செல்வி மரகதவல்லி முதலானவர்கள் சொற்பெருக்காற்றுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

* * *

சென்னைப்பட்டினம்:—பிரதமமந்திரியார் டாக்டர் சுப்பராயன் அவர்களது சொந்த குமாஸ்தாவாக இருந்த திரு புருஷோத்தம முதலியாருக்கு செவ்வாய் ஆகஸ்டு 2? ந் தேதியன்று ஓர் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

* * *

திருச்செங்கோடு:— 22-8-29 அன்று ஆசிரமத்தில் திருவாளர் மு. விஸ்வநாத முதலியார் அவர்கள் தலைமையில் உண்மை நாடுவோர் சங்கவாரக் கூட்டம் கூடிற்று. அது காலை ஆலய வழிபாட்டைப் பற்றி திரு. ஈ. வெ. இராமசாமியார் அவர்கள் ஓர் நீண்ட சொற்பெருக்காற்றினார்கள்.

* * *

நாகப்பட்டினம் :—31-8-29-ல் திருப்பாற்கடலில் அகில இந்திய விக்கிரகங்கள் மகாநாடு நடைபெற்றது. அதுகாலை மண்சிலைகள், மரச்சிலைகள், கற்சிலைகள், செப்புச் சிலைகள், பஞ்சலோகச் சிலைகள், பொற்சிலைகள், மற்றும் உள்ள பல சிலைகளுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பெற்றிருந்தன. மகாநாட்டு நிகழ்ச்சியன்று இப்பொழுது நடைபெறும் ஆத்திகமுறையே பழுத்த நாத்திகம் என ஸ்தாபிக்கப்பட்டதென்று ஒரு நிருபர் வரைகின்றார்.

* * *

லட்சுமிபுரம்:—ஸ்ரீ மீனாட்சி சங்கத்தின் நான்காவது ஆண்டு 6-வது திங்கட்கூட்டம், நாளிது திங்கள் எட்டாம் நாள், திரு. திரிகூட சுந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காரைக்குடி திரு. அரு. சோமசுந்திரனார், கொத்தமங்கலம் திரு. ராம சுபபிரமணியம் ஆகியோர் சொன்மாரி பொழிந்தனராம்.

# திருஞான சம்பந்தரும் பசுபதி யாகமும்

(ஆத்திகன் எழுதுவது)

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் மதங்களைப் பரவச் செய்வதற்காகப் பல வித முயற்சி செய்து வந்திருக்கிறார்கள். அக்காலத்தில் அவர்கள், சமயம் வாய்க்கும்போது அரசனுடைய உதவியைப் பெற்றோ, அல்லது அதிகாரம் சூழ்ச்சி முதலியவைகளைக் கொண்டோ மற்ற சமயத்தாரைக் கொன்றும் கொல்வித்தும் ஒடுக்கி வந்தனர். இது நமது நாட்டில் மட்டுமல்ல, ஐரோப்பாமுதலியமேல்நாடுகளிலும் நடைபெற்றிருக்கிறது. சைவ சமயாச்சாரியாராகிய திருநாவுக்கரசர் காடவ அரசனைத் துணைகொண்டு சமணப் பள்ளிகளை இடித்துத்தள்ளி, அக்கற்களைக் கொண்டு குணபர ஈச்சரம் என்னும் சைவக் கோயிலைக் கட்டியதும், திருமங்கை யாழ்வார் நாகப்பட்டினத்திலிருந்த புத்த கோயிலுக்குள் சென்று, தங்கத்தினால் செய்யப்பட்டிருந்த புதத விக்கிரகத்தைக் கைப்பற்றிக் கொண்டுவந்து, அப்பொன்னைக்கொண்டு திருவரங்கநாதருக்குத் திருப்பணி செய்ததும், திருஞான சம்பந்தர் பாண்டிய மன்னன் உதவியைக் கொண்டு 8,000 சமணர்களைக் கழுவேற்றிக் கொன்றதும, முகம்மதியர் தங்கள் மதத்தில் சேராதவர்களைத் தங்கள் பலாத்கார பலத்தைக் கொண்டு கட்டாயப்படுத்தி ஜனங்களை முகம்மதியராகச் செய்ததும், புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களும் கத்தோலிக் கிறிஸ்தவர்களும் ஒருவரையொருவர்வெட்டிமடிந்துஐரோப்பிய நாட்டைரணகளமாக்கியசரித்திரங்களும்,இன்னும்இவைதப் போன்ற அநேக சமயச் சண்டைகளும் நேரிட்டதன் காரணங்களை யோசிக்கும்போது ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் சமய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகச் செய்த முயற்சி என்றே நிச்சயமாகச் சொல்லலாம்.

திருஞானசம்பந்தர் 8,000 ஜைனர்களைக் கழுவேற்றக் காரணமாயிருந்ததை, மதுரையில் நடக்கும் கழுவேற்றும் உற்சவமும், சம்பந்தர் சரித்திரமும் சான்று கூறுகின்றனவென்றாலும், சுவாமி வேதாசலம்போன்ற சைவர்கள் இதற்குக் கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்றுகள் இல்லாதபடியால் சமணர்களைச் சம்பந்தர் கொன்றதாகச் சொல்வது தவறு என்று சொல்லுகிறார்கள். ஆதாவது சம்பந்தர் 8,000 பேரைக் கொல்வதற்குக் காரணமாயிருந்தவர் என்பதை மறைக்கப் பார்க்கிறார்கள். ஆனால், சம்பந்தர் குற்றவாளி என்பதை உலகமே ஒப்புக் கொண்டுவிட்டது.

இன்னும் சம்பந்தர் யாதொரு தீங்கும் இயற்றாத ஆடுகளைக் கொல்வதற்கும் துணை நின்றிருக்கிறார் என்பதும் அவருடைய சரித்திரத்திலிருந்தே தெரிய வருகிறது. திருஞான சம்பந்தர் திருவாவடுதுறையில் சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தபோது அவரது தகப்பனாரான சிவபாதவிருதயர், சம்பந்தரிடம் வந்து 'நான் யாகம் செய்ய நினைத்திருந்த நாள் சமீபித்துவிட்டது. யாகம் செய்வதற்குப் பணம் வேண்டும்'' என்று கேட்கிறார்.

உடனே திருஞானசம்பந்தர் சுவாமியிடஞ் சென்று "இடரினுந் தளரினும்'' என்னும் பாசுரத்தைப் பாட, சுவாமி கட்டளையால் ஒரு பூதம் தோன்றி 1,000 பொன் நிரம்பிய ஒரு பையைக் கொண்டுவந்து கொடுக்க, அதைத் திருஞான சம்பந்தர் வாங்கித் தந்தையிடம் கொடுத்து "இப்பணத்தைக் கொண்டு வேத விதிப்படி யாகம் செய்'' என்று சொல்லி கொடுக்கிறார். அவர் அதைப் பெற்றுக் கொண்டுபோய்சீர்காழியில் யாகம் செய்கிறார். இந்த விஷயம் பெரிய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால், பார்ப்பனராகிய திருஞானசம்பந்தர் பணத்தைச் சேகரித்துத் தந்தையாரிடம் கொடுத்து ஆடுகளைக் கொலை செய்வதற்கும் காரணமாயிருந்தார் என்றுதெரிகிறது.

இப்படி நாம் உண்மையை எடுத்துச் சொன்னால் மூடபக்தியுள்ளசில சைவர்கள் நம்மைத் துவேஷிகளென்றும், சைவ நிந்தை செய்கிறவர்களென்றும் சொல்லுகிறார்கள். ஆனால், நாம் நிந்திக்கவேண்டும் என்றாவது, பிறர் மனதைப் புண்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தோடாவது இதனை எழுதவில்லை. உண்மையை உணர்த்தும் பொருட்டே இதனை நாம் எழுதுகிறோம். உயிர்க் கொலை புரியும் வேள்வியையும் அவ்வேள்வியைச் செய்வதற்கு ஆதாரமாகவுள்ள வேதங்களையும் ஒப்புக்கொள்ளாமல் ஜீவகாருண்ய ஒழுக்கம்கொண்ட சமணர்களையும்,பௌத்தர்களையும் ஒடுக்கி கொலைத்தொழில் உள்ள யாகத்தையும் அதனை உடன்படும் வேதத்தையும் நிலை நிறுத்தியவர் திருஞான சம்பந்தர் என்பதற்கு வேறு ஒரு ஆதாரம் வேண்டுமோ? உண்மைச் சைவர் இவ்வேள்வியை அங்கீகரிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறோம்.

ஆடுகளைக் கொலை செய்யும் குற்றம் தொண்டர்களோடு நிற்கவில்லை. பெரிய புராணத்திலுள்ள திருஞான சம்பந்தர் சரித்திரம் "எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான சிவபெருமான்'' பசுபதி யாகம் செய்வதற்கு உதவிபுரிந்தார் என்று சொல்வதனால் அவர் மேலும் கொலைக்குற்றம் சுமத்தப்படுகிறது. உண்மையான ஒரு முழுமுதற் கடவுள் தன் சீடர்கள் ஆடுகளைக் கொலை செய்து (அதுவும் சித்திரவதை செய்து) யாகம் செய்வதற்காகப் பண உதவி செய்யுமா என்று கேட்கிறோம். இப்படிக் கேட்பதால் கடவுள் நிந்தை "சிவ நிந்தை''செய்வதாக ஒருவரும்நம்மை மூட்டாள் தனமாக நினைக்கக்கூடாது. ஏனென்றால்,நாம்பெரியபுராணத்திலுள்ள ஆதாரங்களைக்கொண்டு தான் கேட்கிறோமேதவிர,நமது சொந்தஆதாரம்ஒன்றையும்புகுத்தவில்லை. திருஞானசம்பந்தர் பசுபதி யாகம் செய்ய துணைநின்றது நியாயந்தானா?

---

சிக்கத்தம்பூர்:—சிக்கத்தம்பூர் ரோமன் கத்தோலிக் குருக்கள்மார் குடியரசைப் படிப்பவர்களைச் சாதி நீக்கம் புரிவதாக பயமுறுத்துகின்றனர் என்றும் அவர்களைப் போல நமது குடியரசு, மோட்ச வீடு தட்சணை, கலியாண சந்திப்பு தட்சணை, தலைக்கட்டு வரி, அபராதப் பணம், பூசைவைக்கப் பணம், கல்லறை மந்திரிக்கப் பணம், பிணம் மந்திரிக்கப் பணம் வாங்குவதில்லை யென்றும்சிக்கத்தம்பூர் போர்டு ஸ்கூல்மாஸ்டர்செல்வி பி. மரியம்மன் தெரிவிக்கின்றார்.

---


## படித்தீர்களா?

| | |
|---|---|
| பிரபஞ்ச உற்பத்தி 560 பக்கங்கள்; இனேன் பதிப்பு; பொன் இலிட்டு பைண்டு விலை ரூபாய் | 4 0 0 |
| அன்புற்ற மங்கை 316 பக்கம் | 1 12 0 |
| குடும்ப கதைகள் 800 பக்கம் | 2 0 0 |
| பாக்கெட் வைத்தியம் | 1 0 0 |
| கொக்கோகம் | 1 0 0 |
| மண வாழ்க்கையின் மர்மம் | 2 4 0 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1 8 0 |
| மதனகம லீலை | 2 0 0 |

தபால் கூலி வேறு; விபர ஜாப்தா இனாம்

விலாசம்:—

லக்ஷ்மண பிரசாத் கம்பெனி,
(25) (டிபாட் 19) புதுச்சேரி.

---

பாக்கெட் டிடக்டிவ்
அல்லது
லீ பாக்ராஸ் கோப்

இது கெட்டி ரப்பரால் நூதனமாகச் செய்யப்பட்ட அமெரிக்கன் கருவி.




நகை வியாபாரிகள் பூதக்கண்ணாடி உபயோகிப்பது போல் இதைக் கண்ணில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆச்சரியம்! முன்னாலும் பின்னாலும் என்ன நடப்பதென்பதைத் திரும்பிப் பாராமலே தெரிந்து கொள்ளலாம். உமது காதலியின் செய்கைகளை அவளறியாமல் நீங்கள் கண்டு பிடிக்கலாம். வெகு தமாஷை உண்டாக்கும் கருவி இது. நான்கு லீலா விநோத பிரெஞ்சுப் படங்கள் இனாமாக அனுப்பப்படும்.

ஒரு கருவியின் குறைந்த
விலை ரூ. 1/8.


இன்டோ பாரின் கம்பெனி
(39) நெ, 27 பீட், ஜி.டி., மதராஸ்.

---

## படக்காட்சி

ரூ. 20 ஆகயிருந்தது ரூ. 5-0-0
தான்
அமெரிக்கன் சிறிய சினிமா
மெஷின்

வெகு நூதனமான இந்த மெஷினினால்பொதுப் படக்காக்ஷிச் சாலையில் அநுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம்.



நர்த்தனமாடுவது, தீரச்செயல்கள், மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காக்ஷிகள் ஓடுவதும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு கஜம்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

| | |
|---|---|
| மெஷின் குறைந்த (அசல்) விலை ரூ. | 5 0 0 |
| தனி பிலிம் டேப் 1 கஜம் | 0 6 0 |
| 3 கஜங்கள் | 1 0 0 |


முந்துங்கள்!
லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.
(608 பி)

---

நூதனம்! அதிசயம்!!
குறைந்த விலைக்கு விற்பனை!!!
எலெக்டிரிக்

## மேஜை விளக்கு

இந்த விளக்கு மேஜையின்மேல் வைக்கக் கூடியதாய் பல்புடனும், மேல் மூடனும் இருக்கிறது. சுவிச்சைப் போட்டவுடன் பளிச்சென்று நல்ல பிரகாசத்தை நாலா பக்கமும் பரப்புகிறது. விசேஷ சமயங்களிலும், சபைகளிலும், கூட்டங்கள் மத்தியிலும், இந்த விளக்கை வைத்துக் கொண்டால்



ஒருவிதகஷ்டமுமில்லா திருப்பதோடு மிக அழகாகவு மிருக்கும். மாணாக்கர்கள் மேஜையின்மீது வைத்துப் படிக்கச் சௌகரியம். உடனே எழுதுங்கள். இந்த தினுசில் கொஞ்சம்தான் கையிலிருக்கின்றன.

குறைந்த விலை ரூபாய் 4-8-0
தபால் செலவு தனி.
லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை, மதராஸ்,

# திரு. ஈ. வெ. ராமசாமி பெரியாருடன் பண்டைத் தமிழ் சித்தர்களும் நாஸ்திகர்களா?

## கடவுளைப் பார்த்துப் பேசியவர்கள் பதில் சொல்லட்டும்.

(சித்தக்காடு கே. ராமையா.)

தனக்குத்தானே நாயகனாக இருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரிது. ஆனால், இந்நாட்டிலோ இவ்வுரிமை நூல்வசனங்களாலும், பழமொழிகளாலும், கிரியை சடங்குகளாலும், உருவவழிபாட்டாலும் மறைக்கப்பட்டு புரோகிதக் கொடுமையால் சாதிச் சண்டைகளும், சமயக்குறிச் சண்டைகளும் தீவிரமாக நடந்து வருகிறது. எப்படி ஐரோப்பா, துருக்கி, ருஷ்யா, சைனா போன்ற தேசங்கள் குருக்கள் கட்டுக்கு குருட்டுத்தனமாய் கீழ்ப்பட்டிருந்த தன்மையை வெட்டி தன்மதிப்பைக் காத்து சுயராஜ்யமடைந்தனவோ, அம்முறையில் இந்தியர்களும் சுயராஜ்யமடைவதற்கு அடிப்படை, உயர்வு தாழ்வில்லாமல் ஒவ்வொருவரும் தன் மதிப்பைக் காத்துக் கொண்டால்தான் தலைதூக்கி சுயராஜ்யப் பாதையில் கால் வைக்க முடியுமென்று ஈரோடு திரு. ராமசாமிப்பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்து ஜனசமூகத்திற்குப் போதிக்கின்றார். இதற்காக அவரை அரைப்படித்த பண்டிதர்கள் ஆஸ்திகத்தின் பெயரால் சிலரை ஏவிவிட்டு திட்டி, குறைகூறிவருகிறார்கள். சுயமரியாதை இயக்கம் ஜனசமூகத்திற்குத் தீயதல்ல. ஆனால், புராணப்பிரசங்கிகளுக்குக் கொஞ்சம் இடையூறாய் இருந்தாலும், அவர்களுக்கு அந்தரங்கம் தெரியும். பண்டிதர்கள் படித்து ஒத்துக்கொண்ட புஸ்தகங்களிலிருப்பதைவிட சுயமரியாதை இயக்கம் புதிதாகவோ, அதிகமாகவோ சொல்லிவிடவில்லை என்பது ஆஸ்திக அரைப்பண்டிதர்களுக்கும், செம்மையாகப் படித்தவர்களுக்கும் நன்கு தெரிந்த விஷயமே. பண்டிதப் பெரியார்கள் யாரைப் பெரியார்களென்று போற்றுகிறார்களோ அவர்கள் புகன்ற உரைகளுக்கே ஈரோட்டுப் பெரியார் ஆயக்கோல் காட்டி வருகிறார். அவர்கள் எழுதிப் போனவைகளுக்கும் காலாவதி பரிகாரமாக "குடி அரசு" மூலம் கையெழுத்து போட்டுவருகிறார்கள். ஆஸ்திக அரைப் பண்டித நண்பர்கள் ஈரோட்டுப் பெரியாரை நாஸ்திகர், படிக்காதவர் என்று வாயில்வந்த வசைமொழி புகல்வதில் பண்டைச் சித்தர்களுக்கும் திரு. இராமசாமிப் பெரியார் கருத்துக்கும் யாதொரு முரண்பாடில்லையென்று அறியார்கள் போலும். இதற்குச் சான்றாக:—

சிவவாக்கியர் உருவ வழி பாட்டைக் கண்டித்து,

"நட்டகல்லை தெய்வமென்று நாலு புட்பஞ்சாத்தரீர்
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லு மந்திர மேதடா!
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையிற்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ"

யாத்திரையை கண்டித்து,

"தூர தூரமென்று சொல்லி யோடும் வீணரே
பாரும் விண்ணு மெங்குமாய்ப் பரந்த மெய்ப் பராபரம்
ஊரு, நாடு, காடுமே யுழன்று தேட வேண்டுமோ
நேரதாக வும்முள்ளே நினைந்தறிந்து கொள்ளுமே"

புனர் ஜென்மத்தை மறுத்துரைத்து,

"பல்லுயிர்களாய் மனுப் பிறக்குமென்று பாரிலே, சொல்லும் வேத மோதுகின்ற துஷ்டர்காள் அறிகிலீர்! வல்லதோர் சுரையின் வித்த மாறிப் பாகலாகுமோ, இல்லையே இறந்தபேரினிப்பிறப்ப தில்லையே"

"கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்த சங்கினோசையும் முயிர்களுடல்புகா வடிந்த வேரடியினி
லுதிர்ந்தபூ மரம் புகா இறந்துபோன மானிடர் இனிப் பிறப்பதில்லையே"

ஜாதியைக் கண்டித்து.

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சி தோலெலும்பினுள் இலக்கமிட்டிருக்குதோ?
பறைச்சி போகம் வேறதோ? பணத்தி போகம் வேறதோ?
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப் பாரும் உம்முள்ளே.

இருக்கு நாலுவேதமும் எழுத்தறவே ஓதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரானிராண்
உருக்கி நெஞ்சை உட்கலந்து உண்மைகூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியே தொடர்ந்து கூடலாகுமோ?"

சிலை வணக்கத்தைக் கண்டித்து நாதாந்த விளக்கத்தில்,

கல்லுகளைத் தெய்வமென்றே சொன்னபேரும்
காசியென்றுஞ் சேதுவென்று முழுகினோரும்,
தொல்லையாம் பூசைகளைச் செய்தபேரும்,
சூதுகொலை பொய்களவு செய்தபேரும்,
எல்லை இல்லா எழுநரகந் தன்னில் வீழ்ந்து
எழுபிறப்பும் கல்லுகளாயிருப்பர்தாமே.

பட்டினத்துப் பிள்ளையாரும்

சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேத சுருதியிலும்
மல்லினு மாசற்ற வாகாயந் தன்னினு மாய்ந்து விட்டோர்,
இல்லினு மன்ப ரிடத்தினு மீச னிருக்குமிடம்
கல்லினுஞ் செம்பினுமோ இருப்பா னெங்கள் கண்ணுதலே"

"பெரும்பாவி புட்டத்துள்ளே பிறப்பிலும் நோய்ப்பருவை
அரும்பாவி கூடிக்கொண்டு அலைவதனை யம்மை என்று
கரும்பாகுஞ் சீனி தேனுங் கள்ளுடன் படைப்பீராகில்
திரும்பாத வியாதிதானுந் திரும்புமோ மாந்தர் சொல்லீர்"

போதநூல் 40-ம் பாட்டில்,

"நீற்றிற் கிடந்தென்ன நீராடப் போயென்ன, நீ மனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை மாமறை நூல்
ஏற்றிக் கிடக்கின்ற எழு கோடி மந்திரமேதுக்கடா
ஆற்றிற் கிடந்து துறையறியா தலைகின்றனரே"

பத்திரகிரியார் புலம்பலில்,

உளியிட்ட கல்லு முருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவதெக்காலம்.
சாத்திரத்தைச் சுட்டு சதுர்மறையை பொய்யாக்கி, சூத்திரத்தைக்கண்டு சுகம்பெருவதெக்காலம்
ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவரையில்லாமல் சஞ்சரிப்பதெக்காலம்.

குதம்பை சித்தர்,

"கல்லினைச் செம்பினைக் கட்டையைக் கும்பிடல்
"புல்லறிவாகுமடி- குதம்பாய்- புல்லறி வாகுமேடி"
"மெய்த்தேவ னென்றென்று வேண்டாதபல மதம்
பொய்த்தேவைப் போற்றுமேடி- குதம்பாய்-பொய்த்தேவைப் போற்றும்"
"ஆண்ஜாதி பெண்ஜாதி யாகுமிரு சாதி
வீண்ஜாதி மற்றதெல்லாம்- குதம்பாய்-வீண்"
"பார்ப்பனர்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும்
தீர்ப்பாகச் சொல்வதென்ன குதம்பாய் - தீர்ப்பா
"கர்த்தன் பறையோரைப் பார்ப்பாரைப் போலவே
தீர்ப்பான் படைத்தாரோடி குதம்பாய்—தீர்ப்பா",

அகத்தியர்ஞானம் 56ம் பாட்டில்,

"அண்டரண்டம்கடந்துநின்ற சோதி தானு
மனிதனி லுடைந்த கல்லிலு மருமோ சொல்
எண்டிசையுமெவ்வுயிரு மானசோதி
ஈனமரங் கல்லுகனி லிருப்பாரோ தான்."

மேலும்

இன்பமாய் காலுவேதம் வந்தவாறும்
எழுதினர் வேதவியாசர் சாத்தான் போலும்
அன்பாகப் பலவிதத்திற் கட்டிப் போட்டார்
அதனாலே மானிடர்கள் கெட்டுப் போனார்

ஞான வெட்டியான்

விட்டகுறை வருமளவும்உபதேசங் காண் மெய்யுடலுந்தளர்ந்து புவிமேலு நோக்கி, தட்டழிந்து விழும்போது ஓதிவைத்த சாத்திரத்தை கண்ணப்போது மதிப்போமோ, எட்டிரண்டும் அறியாதார் குருக்களாமோ என்னையினி பறையனென்று தள்ளப்போமோ, மட்டுளுநம்பும் குழல்வாலாம்பிகைப் பெண் வங்கிடத்திலுதித்த சாம்பவனும் நானே.

529-ம் பாட்டில்,

"இறப்பும் பிறப்பு மறிந்துணர்ந்து உரைத்தானுகில்
எம்பிரா னென்றவரைப் பணிவேன் காணும்
மறுபிறவி யுண்டென்பா ருலகத்தாசான்
மதியெனது கருத்தினிலுங் காணேனன்றே".

530-ம் பாட்டில்,

"இறந்தவுடன் விழுந்தாவி பிரிந்த பின்பு
மறுஜெனன மாகிவந் துடலெடுத்து
அறிவிலார் மறுபிறவி பிறப்பாரென்றும்
அட்டி வெகு பொருட்களெல்லாம் பறிப்பாரன்றே

531ம் பாட்டில்,

வித்திருந்தால் விளைவுமுண்டுமரந்தானுண்டு;
வேரற்றால் மரமதுவும் தளிர்க்குமோ சொல்.
சத்தியமே மொழிந்திடவுங் காணுரான்றே
சாத்திரத்தை மெய்யெனவும் நம்பொணாது
இத்தனையினி யறியாதவுலகத்தாசான்
இறந்தவுடல் பிறக்குமென் றியம்புவானே.

பல ஞானிகள் பாடி இருப்பது,

"வில்வந் துளசி கொன்றை, கொல்லும் அலரி ஆத்தி
வேம்போடரசு வன்னி, ஓடபால் பனையறுகம்
புல் ஓதி தருப்பை மாவும், நல்லும் கதியென்றெண்ணி
பொருளைக் காணமற் போனீர், இருவின் மக்களே நீங்கள்
"கருடன் கழுதுமயில், திருடும் காய் பெருச்சாளி

# ‘சித்தாந்தம்’ ஆசிரியரின் கொடுமை

சென்னை மணலி வீதியில் நடந்த அக்கிரமம் நம் மனத்தைப் புண்படுத்துகின்றது. இவ் வீதியிலுள்ள ஒரு பார்ப்பனரல்லாத மாணவன் தன்னை அறியாமல் ஒரு பார்ப்பன மாணவன் சாப்பாட்டுப் பேழையை (டிபன்பாக்ஸ்)த் தொட்டுவிட்டான் உடனேபார்ப்பனரல்லாதார் தருமத்திலிருந்து தெண்டச்சோறு சாப்பிடும் அப்பார்ப்பன மாணவனுக்குக் கோபம் வந்துவிட்டது. என் சாப்பாட்டைத் தொடவா நேர்ந்தது என்று பலவாறு அரற்றி சாப்பாட்டை கீழே கொட்டிவிட்டு, பிராமண சூப்பரின்டெண்டெண்டினிடம் போய் முறையிட்டான். அவர் பார்ப்பனரல்லாத மாணவனைப் பார்ப்பனச் சாப்பாட்டைத் தொட்ட குற்றத்திற்காக வாயாற் வசை புராணம் பாடி அனுப்பிவிட்டார். ஆனால், இது அப்பார்ப்பன மாணவனுக்கு ஒப்பவில்லை. தன் சாப்பாட்டைத் தொட்ட பார்ப்பனரல்லாத மாணவனுக்கு வெறும் வசை புராணம் மட்டுமா என்ற ஆத்திரம் அவனுக்கு அடங்காது கிளம்பி விட்டது. ஆகையால் அப்பார்ப்பன சூப்பரின்டென்டெண்டுக்கு மேல் அதிகாரியாய் உள்ள “சித்தாந்தம்” ஆசிரியரும் ஒரு வக்கீலுமான திரு ‘பாலசுப்ரமண்யம்’ அவர்களிடம் சென்று முறையிட்டான், முறையிட்டதுதான் தாமதம். நம் பார்ப்பன முதலியாராய திரு. பாலசுப்ரமணியத்திற்கு பெரும் சீற்றம் உண்டாய விட்டது. அவருடைய பெருத்த கொழுத்த உடம்பு துடித்தது. கொண்டுவா பார்ப்பன மாணவனின் சாப்பாட்டுப் பேழையைத் தொட்ட பார்ப்பனரலலாத மாணவனை என்றார். பழைய காலத்து அயோத்தி ராமன் காட்டில் தவம் செய்த சூத்திரனை எவ்வாறு கொன்றானோ, அவ்வாறே சிந்தாந்தப் பார்ப்பன முதலியாரும் பார்ப்பன மாணவன் சாப்பாட்டைத் தொட்ட பார்ப்பனரல்லாத மாணவனைக் கடிந்து வெருட்டி ஆறு அடி அடித்தாராம். பாவம் ஏழைப் பார்ப்பனரல்லாத மாணவன் என்ன செய்வான்? அத பொறுத்துக் கொண்டான்; கோர்ட்டிற்குச் சென்று சித்தாந்த ஆசிரியர் மேல் கிரிமினல் வழக்குத் தொடுக்கலாமென்றாலோ, வயிற்றுச் சாப்பாட்டில் இடிவிழுந்து விடும்; கையிலோ பணமில்லை. ஆகையால், சித்தாந்த ஆசிரியர் தப்பித்துக்கொண்டார். இல்லாமல் போனால் ஒரு கைபார்த்து விடலாம்.

சித்தாந்த ஆசிரியர் பி. ஏ. பி. எல். படித்திருந்தும், தமிழில் பெரிய புலவர் என்று சொல்லிக் கொண்டு இருந்தும் என் பயன்? சிறிதாவது சுயமரியாதையாவது உணர்ச்சியாவது அன்றி பகுத்தறிவாவது இருந்தால் இவ்வண்ணம் செய்வாரா? ஒரு பார்ப்பனரல்லாத மாணவன் பார்ப்பான் சாப்பாட்டுப் பேழையைத் தொட்டால் என்ன தீட்டு வந்துவிட்டது? இதை ஆய்ந்து நோக்கினரா? சித்தாந்த ஆசிரியர் சரியான பார்ப்பனரல்லாதாராய் இருந்தால், அப்பார்ப்பனரல்லாத மாணவனுக்கு நேர்ந்த அவமானம் தனக்கும் தன் வகுப்பாருக்கும்நேர்ந்ததென்று கருத வேண்டாமா? இத்தகைய சுயமரியாதையற்ற அறிவுகெட்ட பார்ப்பனரல்லா பாலசுப்பிரமணியங்கள் இருந்தால் என் பார்ப்பனர்கள் வருணாச்சிரமக் கொழுப்பு பிடித்தாடமாட்டார்கள்? என்றுதான் இவருக்குச் சுயமரியாதை உணர்ச்சி உண்டாகுமோ? அன்றுதான் இவரை நாம் அசல் பார்ப்பனரல்லாதார் என்று கருதுவோம்.

இனி மணலிவீதியில்மட்டுமல்ல. எங்கும் பார்ப்பனரல்லாத மாணவர்கள் இவ்வாறுதான் அன்புறுகின்றார்கள். இவர்கட்கு எப்பொழுதுதான் விடுதலை பிறக்குமோ? நம் சுயமரியாதை அரசாங்கம் வந்தால் விடுதலை! விடுதலை!! என்று திராவிடன் 28-8-29 வெளியீட்டிற் கூறப்பட்டுள்ளது.

பார்ப்பனனின் சோற்றைத் தீண்டிய பார்ப்பனரல்லாத மாணவர் இந் நாகரிக காலத்தில் சைவ சித்தாந்தப் பேராசிரியர், சட்ட துரந்தரர் திரு விலாப் பாலசுப்பிரமணியத்தின் கசையடிக்கிலக்காயினர். இவரது சித்தாந்தமும், சட்டப் பயிற்சியும், ஒரு மாணவரை இச்செயல் பொருட்டு கசைகொண்டடிக்கும் முடிவைப் பயிற்றிய தெனில், அந்தோ, இவரது சைவ சித்தாந்தத்திற்கு நாம் மிகவும் இரங்குகின்றோம். மாட்டு மலத்தை உண்டு, மாட்டுச் சிறுநீர் பருகி, மாட்டு மலத்தைச் சாம்பராக்கி அங்கம் முழுதும் பூசி, கொட்டையணிந்து, லிங்கத்திறகுப் பூசை புரியும் இச்சித்தாந்த ஆசிரியரிடம், வயிற்றுக்குச் சோறின்றி இவ்வீதியில் அபயம் புகுந்த ஒரு மாணவர் மீது கருணையினையும், நீதியினையும் நாம் எதிர்பார்ப்பது மிகவும் மடமையே. பூணூல் தரித்த பார்ப்பனனிலும், பூணூல் தரியா இப்பார்ப்பனனை நாம் கல்லென்போமா, மரமென்போமா, இரும்பென்போமா, அல்லது காடுவாழ் விலங்கு என்போமா? என்னென்போம்? மதவெறிகொண்ட சித்தாந்திகளிடம் நாம் கருணையை எதிர்பார்க்கவில்லை, ஆயின் சட்டம் பயின்ற ஓர் மனிதரிடம், ஆண்பிள்ளையினிடம், நற்குடும்பத்தில் உதித்தாரிடம், நடுநிலைமையை எதிர் பார்க்கின்றோம். நடுநிலைமையற்று, ஆண் தன்மையற்று, தன் பயிற்சியெல்லாம் இரண்டெழுத்துக்கள் என்னும் முடிவிற்கே ஒப்படைத்து விட்டதன் பயனாய் பாவிய எண்ணம் அற்று, பார்ப்பனீயத்தையும், அதனைப் பாதுகாக்கக் கசையடியையும் கைக்கொண்ட ‘சித்தாந்தம்’ ஆசிரியர் இனியேனும் தம் மூளையில் சிறிது அறிவும், மனதிற் கருணையும் பிறக்குமாறு இவர் தன் வழிபடு கடவுளாகிய லிங்கத்தை வணங்கித் துதிப்பாராக. பார்ப்பனரல்லாத ஒரு மாணவர் கசை அடியேற்ற ஒரு கொடுமையை ஏனைப் பார்ப்பன ரல்லாத மாணவர்கள் கண்டும் வாளாவிருந்திருக்கின்றனர். பொறுமை கடலினும் பெரிதென்பர். ஆயினும் சுயமரியாதை இவ்வண்டத்தினும் பெரிது; சித்தாந்தத்திலும் பன்மடங்கு பெரிது; அவ்வாசிரியர் அறிவிலும் ஒழுக்கத்திலும் ஓராயிரம் மடங்கு பெரிது என்பதை நாம் நம் வகுப்பு மாணவர்கட்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இக் கொடுமையை எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும், நாம் அமைதியை இழப்போம் என்றஞ்சுவதனால், இதைப்பற்றி விரித்துரையாது விடுக்கின்றோம். பார்ப்பனரல்லாதார்கள் இத்தகையசெயல்களைக் கண்டும், கேட்டும், எத்தனைநாட்கள் தாம் சும்மா விருக்கப்போகின்றனர்என்று கேட்கின்றோம். (ப-ர்.)

கடிக்கும் பாம்பு குரங்கு, பிடிக்குங் குதிரை யானை
குருடுகளே! மாடுகளையும், அதன் சாணியையும் பெண்
குறியையும் தெய்வமென்று, வெறி கொண்டலையாதேயும்”
தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
திக்கிடங்கைத் தேடாதே தெளியச் சொன்னேன்
பாடுவாய் பதினெட்டுப் புராணங் கட்டுப்
பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள்
நாடதனிற் பிராமணர் பிழைக்கச் செய்த
கலக்கிரகக் கட்டப்பா நம்ப வேண்டாம்
ஓடுவா மருள்பாத பூசை செய்து
உத்தமனே கண்ணீரால்கழுவுவாயே.

இம்மாதிரியாக சிவனையும் விஷ்ணுவையும், பதினென் புராணங்களையும், நாலு வேதங்களையும், விக்கிரக வணக்கத்தையும், தாவர வணக்கத்தையும், பிராணிகள் வணக்கத்தையும், ஆயுத வணக்கத்தையும், ஜாதி வித்தியாசத்தையும் கண்டித்தும்; இவைகளெல்லாம் பார்ப்பனர்கள் பிழைக்கச் செய்த சூழ்ச்சி என்றும், இதனாலே மானிடர்கள்கெட்டுப் போனார்களென்றும் பாடி இருக்கிற பண்டைச் சித்தர்கள் ஞானிகள் ரிஷிகள் எல்லாம் நாத்திகர்களாயின் ஈரோடு இராமசாமியாரும் நாத்திகராவதில் கெட்டுப் போவதென்ன? இப்பெரியார்களை விடவா ஈரோடு திரு ஈ. வெ. ராமசாமியாரவர்கள் சொல்லிவிட்டார்கள் என்பதை கூர்ந்து படித்துப் பார்த்துப் பேசவேண்டும். கொழும்பாவி கட்டுங்கள்; மயானத்துக்கு கொண்டுபோய் கொளுத்துங்கள்; வையுங்கள்; திட்டுங்கள்; ஆனால், தங்கள் மூளைக்குச் சிறிது வேலை கொடுக்கச் சோம்பலடையாதீர்கள்; மூளையை விருத்தி செய்யுங்கள். இத்தகைய பெரியார்கள் சொல்வதில் அழிந்து போகாத, மதமும், சாமியும், சாத்திரமும், இராமசாமியாரால் அழிந்து போய்விடுவதாக கூச்சலிட பற்பல விதமான புரட்டுப் புராணங்கள் ப்ரபஞ்சத்தில் புகலப்பட்டிருக்கின்றன; திருட்டு நூல்களைப்பார்த்துருட்டுத்தனமாக வித்துவான்களும் அதை விரும்பலானார்கள்என்பதை உணர வேண்டும்.


நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச ரோக நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9.
6 டின் விலை. ரூ. 5-4. 3 டின் விலை ரூ. 3.
F, M. S. முதலியவூர்களுக்கு முன் பணம் ரூ. 2-8. அனுப்பவேண்டும்.
முன் பணம் இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(12) அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
S. INDIA.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போலும்!

வாலியும் சுக்கிரீவனும் ஒரு தந்தைக்குப் பிறந்த பிள்ளைகளென்றும் அவர்களுள் வாலியிடம் தந்தை அன்புடனிருந்தனனென்றும், பரம்பரையாக வந்த அரசாட்சியையே மூத்தவனாகிய வாலி ஆண்டனனென்றும் சுக்கிரீவனே கூறுகிறான். ஆனால், சில இடங்களில் இவர்கள் இந்திரனுக்கும் சூரியனுக்கும் பிறந்த பிள்ளைகளென்றும் கூறப்படுகின்றனர். இது வேண்டுமென்று ஆரியரால் கட்டப்பட்ட கதையாகவே இருக்க வேண்டும். 'இவர்களைக்குரங்குகளென்றேஆரியர் வேறு என்னகதைதான் இவர்களைப் பற்றிக் கட்டிவிட்டிருக்க மாட்டார்கள்? குரங்குகளுக்கு அரசாட்சியேது? கோட்டை கொத்தளங்கள் ஏது? நாடு நகர வாழ்க்கைகள் ஏது? சுக்ரீவன் தன்னை ஒற்றை ஆடையுடன் வாலிதுரத்திவிட்டதாகக்கூறுகிறான் இதனால் இவன் ஒற்றையாடைக்கு மேலாடை வேண்டுமென்ற நாகரீக உணர்ச்சியுடையவனாகக் காணப்படுகிறான். குரங்கேல் ஆடையேது? ஆதலின் இவையெல்லாம்ஆரியர்வேண்டுமென்று கட்டிவிட்ட கதைகளேயாம்.

சுக்கிரீவன் ஒரிடத்தில் தன்னால் வாலியைக் கொல்ல முடியுமேனும் அண்ணனென்ற மரியாதையால் பேசாமலிருந்து விட்டதாகவும், மற்றோரிடத்தில் வாலியை நினைக்க நினைக்க நெஞ்சம் நடுங்குகிறதென்றும் முன்னுக்குப் பின் மாறாகக் கூறுகிறான். இவனுக்கு உண்மையில் வலியிருந்திருக்குமேல் வாலியை வெல்ல வேறொருவன் உதவி இவனுக்கேன். தனது அண்ணனைக் கொல்லும்படி ஓயாமல் சுக்கிரீவன் இராமனை வேண்டுகிறான். இத்தகைய தீயோரும் சகோதரத் துரோகிகளும் உளராவரோ? நிற்க, இனி கம்பர் புராணத்தைக் கவனிப்போம்.

கம்பர் சுக்கிரீவனுடைய கெட்ட குணங்களையெல்லாம் மறைத்து அவனை மிகவும் நல்லவனைப்போல காட்டுகிறார். அதற்காக நாம் மேலே குறித்துள்ள வால்மீகி கூறும் கதையையே மறைத்தார். அவருடைய கதைப்போக்கே புதிதாக உள்ளது. இராமன் நீராடிக் கந்த மூலங்களை உண்டு சுக்கிரீவனை நோக்கி நீயும் மனைவியைப் பிரிந்தவனோ என்று வினவியதாகவும், அதற்கு அனுமான் மறுமொழி கூறியதாகவும் கம்பர் கூறுகிறார். சுக்கிரீவன் கூறியதாக வால்மீகி கூற அவன் செப்பியதாக உரைத்தால் மக்கள் தாம் கூறும் பொய்க்கதையை நம்பார் என அக்கதையை அனுமான் மிசையிற்கூறுகிறார். அனுமான் "வாலி மிகவும் வல்லவான். எதிரிகளுடைய ஆற்றலில் பாதியை வாங்கும் தன்மையன். மாயா வியாதாவுத்தில் நுழைதலும் வாலி சுக்கிரீவனைக்காவல் வைத்து உள்ளேபோனான். இரண்டேகால் ஆண்டுகள் வரை அவன் வெளிவரவில்லை. அப்போது சுக்கிரீவன் மனக்கவலை கொண்டு அழுதான். நாங்கள் அவனைத் தேற்றி வாலிக்குப் பதில் அரசுபுரிய வேண்டினோம். அப்போது அவன் அதைமறுத்துப் 'பாதாளத்தில்போய் வாலியைத் தேடப் போகிறேன், வாலி இறந்தால் அவனைக் கொன்றவனைக் கொல்வேன், இல்லையானால் நான் இறப்பேன்' என்று கூறிப் பாதாளம் போகப் புறப்பட்டான். நாங்களெல்லாம் ஒன்றுகூடி மறுபடியும் தடுத்து அவனை அரசனாக்கினோம்; மாயாவி வந்து விடுவானோ என் அஞ்சி அப்பாதாள வாசலைப் பாறைகளால் அடைத்து விட்டோம். வாலி பகைவனைக் கொன்று இங்கு வந்து தோன்றி தன்னைப் பணிந்த சுக்கிரீவனைத் துரத்தினான்" என்று கூறினதாகவும், இராமன் "இருவரும் எவ்வாறு போரிட்டனர் கூறு" என மறுபடியும் அனுமான், "எதிரற்ற ஆற்றலினனாகிய வாலி சுக்கிரீவனைக் கொல்லத் துணிந்தனன். சுக்கிரீவன் அஞ்சிமுன் ஏற்பட்ட சாபத்தால் வாலி இங்கே வரமாட்டானாகையால் இவ்விடத்தில் வந்து வாழ்கிறான். வாலி இவனுடைய மனையாளையும் கைப்பற்றிக் கொண்டான்" என்று கூறினான்.

இதனைப் படிக்கும் அறிஞர்களே! கம்பர், கதையை எவ்வளவு மாற்றி விட்டார் என்று பாருங்கள். சுக்கிரீவன் ஓராண்டு இருந்தனனாக கம்பர் இரண்டேகால் ஆண்டுகள் காத்திருந்தனன் என்கிறார். ஒன்றை இரண்டேகாலாகவாவது பெருக்கிக் காட்டினமட்டில் நின்றாரே கம்பர்! சுக்கிரீவன் அண்ணனைவிட்டு வரமாட்டேனென்று பாதளம் புகத் தொடங்கினனும். அவனை அனுமன் முதலியோர் தடுத்து தாங்களாகப் பாறைகளால் வாயிலை அடைத்து அவனை அழைத்து வந்தனராம்! சுக்கிரீவன் அழைத்துவந்து சிலகாலம் வாலி இறந்ததையும் கூறாமல் இருந்ததையும், அவன் வாலிக்கு அந்தியக் கடன் கழித்ததையும் கம்பர் மறைத்துளர். அவன் தீக்குணம் மறைக்கும் பொருட்டு வாலி வந்து சபைகூட்டிச் சுக்கிரீவனை நாடு கடத்தியமையையும் கம்பர் மறைத்தார். அவனுடைய நற்குணம் மறைக்க. சுக்கிரீவனே நேரில் இராமனிடம் தன் மனத்திலுள்ள ஐயப்பாடுகளைக்கூறி இராமனை முதலில் துந்துபி எலும்பை ஆற்றச்செய்துபின்மரங்களைத் துளைக்கச் செய்தனன் என்று வால்மீகி கூறுகிறார் கம்பர் இந்த முறையையே முற்றிலும் மாற்றினார். சுக்ரீவன் அனுமனை முதலியோருடன் தனித்திருந்து ஆலோசித்து இராமனிடமுள்ள தன் ஐயத்தைக் கூறியதாகவும், அனுமன், "அவ்வாறு ஐயுறுதே. இராமன் திருமாலே ஆதலின், அவனுக்குமுடியாதது ஒன்றுமில்லை. வேண்டுமானால் மரங்களையும் துளைக்கச் செய்து அவனுடைய ஆற்றலைக் காண்" என்று கூறியதாகவும், உடனே சுக்கிரீவன் இராமனை மெல்ல வழிச் செல்வோம் என அழைத்துச் சென்று மரங்களைத் துளைக்கவேண்டியதாகவும், இராமன் யாவரும் அச்சுற அம்பெய்து அம்மரங்களைத் துளைத்ததாகவும், அதனால் சுக்கிரீவன் அவனைத் திருமாலே என எண்ணிப் புகழ்ந்ததாகவும், அப்போது அங்கே துந்துபியின் எலும்புக்கூடு கிடந்ததாக அதன் வரலாறு இராமன் வினவினதாகவும், சுக்கிரீவன் கூறக்கேட்டு இராமன் தன் தம்பியை அதனை ஆற்ற ஆணையிட்டதாகவும், உடனே இலக்குவன் அதனை ஆற்றியதாகவும் கம்பர் கூறுகிறார். நன்றாக ஆலோசித்துச் சுக்கிரீவன் தகுந்த காரணத்தோடு முதலில் துந்துபி எலும்பினையும் பின் மரங்களினையும் இராமனுடைய ஆற்றலை சோதித்தனனென வால்மீகி யெடுத்துக்கூற அம்முறையை மாற்றியதோடு கம்பர் துந்துபி எலும்பை இராமன் ஆற்றவில்லையென்றும், இலக்குவனே இராமனதாணையால் ஆற்றினனெனவும் கூறுகிறார். ஈதெல்லாம் வால்மீகி கதையால் சுக்கிரீவனுக்கு வரும் அயோக்கியப்பட்டதை மறைத்து இராமனைத் திருமாலே யெனக் காட்டக் கம்பர் செய்த வேலைகளாம்! துந்துபி முதலில் கடலரசனிடமும், பின் மலையரசனிடமும் பின் வாலியிடமும்வந்தனனெனவால்மீகி கூற, கம்பர் அவன் முதலில் திருமாலிடமும், பின் அவன் ஏவலால் சிவனிடமும், பின் அவன் ஏவலால் தேவர்களிடமும், பின் அவர்கள் ஏவலால் வாலியிடமும் வந்தனனெனக் கூறுகிறார். மேலும் அவர் மதங்க முனிவனிட்ட சாபவரலாற்றை "வாலிக்குச் சாபம் கிடைத்தது" என்ற அளவில் மட்டும் கூறி நிறுத்திக் கொள்கிறார்.

சீதையினுடைய அணிகலன்களை முதலிலேயே காட்டினனென வால்மீகி கூற அதனை மாற்றிக் கடைசியாகக் காட்டினனெனக் கம்பர் கூறுகிறார். இராமன் அவ்வணிகலன்களைக் கண்டு வருந்துவதைக் கண்ட சுக்கிரீவன் தன் காரியத்தைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம், முதலில் சீதையைத் தேடிக் கொணர்வோமெனக் கூறியதாக அவனுடைய குணத்தையே முற்றிலும் மாற்றி நல்லவனாகக் கூறுகிறார் கம்பர். வால்மீகி ஒவ்வொரு சமயத்திலும் தன் காரியத்தை முதலில் முடித்துக் கொள்ளவே பலவாறு சூழ்ச்சிகள் செய்தனன் சுக்கிரீவன் என்று கூறினார். கம்பர் இத்தீயசெயலை மாற்றிச் சுக்கிரீவனை நல்லவனாகக் காட்டுவதற்கு,

"என்னுடைச் சிறுகுறை முடித்தல் ஈண்டொரீஇப்
பின்னுடைத் தாயினும் ஆக பேறுற
மின்னிடைச் சனகியை மீட்டு வருமால்
பொன்னுடைச் சிலையினாய்! விரைந்துபோய் என்றான்"

எனக் கூறினார். மெய்யை மறைத்துப் பொய்யை மெய்யாகக் காட்டினர் இக்கம்பர்.

மேலும் அனுமன், "சீதையைத் தேட வேண்டுமானால் வாலியைக் கொன்று வானரச் சேனையைக் கைப்பற்றினால்தான் முடியும்" என்று கூறியதாக இக்கூற்றை அனுமன் வாலிமேலேற்றி, அதற்கிசைந்து இராமன் அவர்களை அழைத்துக் கொண்டு வாலியிருக்குமிடம் சென்றனன் எனவும் கம்பர் கூறுகிறார். இதனால் இவர் எடுத்த இடங்களிலெல்லாம் வால்மீகிக்கு மாறுபடுபவரேயாவர்.

கம்பருடைய மன நிலையை முன் கட்டுரைகளில் விரித்துரைத்து வந்துள்ளோமாயினும், இங்கும் ஒன்று எடுத்துக் காட்ட விரும்புகின்றோம். ஏனெனில், அதனை அறிஞர் சிந்தித்தல் இன்றியமையாதது. இராமன் சீதையினுடைய நகைகளைக் கண்டபோது அவை அவைகளை, அவை அவை படிந்திருந்த உறுப்புக்களாகவே கண்டனனும்! அவ்விடத்தில் கம்பர் கூறும் பாடல் வருமாறு:—

(கலன்காண் படலம் ஐந்தாம் பாடல்)

'நல்குவதென்இனி நங்கை கொங்கையைப்
புல்குவ பூணும்அக் கொங்கை போன்றன;
அல்குலின் அணிகளும் அல்குலாயின;
பல்கலன் பிறவும்அப் படிவம் ஆனவே.'

கம்பர் தாம் விரும்பிப் புகழும் கொங்கையை இங்கும் மறக்காமல் கூறியதோடு, அத்துடன் அல்குலையும் கூறி ஓர்படிமேலுயர்த்தார். "சீதையினுடைய கொங்கையில் அணிந்திருக்கும் நகைகள் அவளுடைய கொங்கையே போல் காணப்பட்டன. அவளுடைய அல்குலின் அணிகள் அல்குலேபோலக் காணப்பட்டன" என்றார் கம்பர். அல்குலென்பது பெண்குறி. அதிலும் சீதை பல நகைகள் அணிந்திருந்தாள்போலும்! 'கம்பர் அல்குலின் அணிகள்' என்றார். அவைகளைச் சீதை இராவணனுடைய மடியிலிருந்துகொண்டே எவ்வாறு கழற்றினளோ? அறிஞரே சிந்தியுங்கள்!! இனிமேற் செல்லுதும்.

---


## பாரிஸ் போட்டோ படம்

உண்மை பாரிஸ் மாதர்களின் இன்ப ரகசியப் படங்களின் மூதன்மை வாய்ந்த பிராஞ்சிந்தியா புதுச்சேரியில் தான் கிடைக்குமென்பதை நேயர்கள் அறிவார்கள். ஆகையால் நாம் விவரித்துக் கூறுவது மிகைப்படக் கூறியதாகும். ஆகையால் தாங்கள் ஒரு தடவை ஆர்டர் செய்து பாருங்கள்.

டஜன் ஒன்றுக்கு ரூ. 3. தான்.
பாரிஸ் படம்
இல்லை என்பவர்களுக்கு
ரூ. 50. ரூபா இனும்
அளிக்கப்படும்.

ரா. மு. கன்னைய நாயகர்,
கோந்துசாலை, புதுவை.
(பிராஞ்சிந்தியா.)

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சமம் என்பதே இஸ்லாத்தின் போதனையாகும். அதுவே விசேடமென்றும், இஸ்லாத்திற்கும் எங்கள் இந்து மதத் தத்துவத்திற்கும் வித்தியாசமில்லை யென்றும், என்கொள்கையும் அதுவே என்றும், கனம் சி. பி. அய்யர் சொல்லுகிறார். அப்படியானால் கல்பாத்தி ரதோற்சவத்தில் 144ல் போட்டு ஈழுவர்களை என் தடுக்கவேண்டும். ஆலயப் பிரவேசமும் ஆலய சமத்துவமும் எல்லோருக்கும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருவது அய்யர் அவர்களுக்குத் தெரியாததல்லவே? அங்கு மகமதியருக்குள் செய்த பிரசங்கத்தைப் போல இங்கும் இந்து சமூகங்களுக்குள் அதை எடுத்து ஏன் சொல்லப்படாது?

பிழைப்பிற்கு வழியில்லாமல் அவஸ்தைப்படுவோருக்குக் கொடுத்து உதவ வேண்டியதை ஒரு கடமையாகச் செய்திருப்பதிலிருந்து சமூகத்தில் யாவரும் சமமென்பதும் மனிதனில் உயர்வு தாழ்வு இல்லையென்றும் செல்வான் செல்வமில்லாதவனை இரட்சிக்க வேண்டுமென்று இஸ்லாம் சொல்லுகிறதென்று அய்யர் அவர்கள் சொல்லுகிறார். நமது சமயத்தில் கீழ்மேல் கற்பிக்கப்பட்டிருக்கிறது. சில ஜாதியார்கள் வீதியில் வரப்படாது தொடப்படாது என்பது வழக்கத்திலிருக்கிறது. பார்ப்பார்கள் மற்ற ஜாதிக்காரர்களுக்கு தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்தால் மற்றெல்லாம் சேஷப்பட்டு விடுமென்பதைக் காட்டிக் கொண்டும் வருகிறார்கள். இதன் இந்துமத நுட்பம் பக்குவமடைந்த ஆன்மாக்களுக்குத் தான் தெரியும்போலும்!

முகம்மதியர்களால் பல அரிய நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. நாகரீகமற்ற காட்டுப் பிரதேசங்களில் நாகரீகத்தைப் புகுத்தியிருக்கிறார்கள் என்று அய்யர் முஸ்லிம் மதத்தை சிலாக்கியத்தோடு, நமக்கு முன்னால் காட்டுமிராண்டித்தனமாய் கொடுமையாய் நடந்துவரும் இந்து மதத்திலுள்ள நாகரீகத்தை அனுபவிக்க விடாமல் சண்டாளரென்றும் பாவிகளென்றும் மதித்து மிதித்து வருத்தி அழுத்தி யிருக்கினும் கீழாக நம்மாலும் நம் மதத்தாலும் ஒதுக்கப்பட்ட பல ஆயிரம் ஜனங்களை அணைத்து, ஆசீர்வதித்து நாகரீகத்தைகொடுத்து மனிதனோடுமனிதனாக வாழவைத்தது முஸ்லீம் நாகரீக மென்று சொல்லியிருந்தால் அதிவிசேடமாகவிருக்கும்.

உங்கள் மதம் வெகு அரிய உயர்ந்த உபதேசங்களை உலக அனுபோகத்திற்கு ஏற்ற வழியில் போதிக்கிறது என்று அங்கு முகமதியர்களுக்குச் சொன்னதுபோல இங்கு இந்துக்களுக்கும் அதிலும் முக்கியமாக பார்ப்பார்களுக்கும் சி. பி. அய்யர் போன்ற பார்ப்பார்கள் இனி மேலாவது புத்தியில் படாத நுட்பமென்று சொல்லுவதை நிறுத்தி உலக பிரத்தியட்சஅனுபோகத்திற்கு வேண்டிய ஒழுக்கங்களை சொல்லுவார்களென நினைக்கிறோம்.

முஸ்லிம் ஸ்திரிகளைத் தங்களுடைய ஆனந்தக் கருவிகளென்றும், விளையாட்டுப் பாத்திரங்களென்றும் முஸ்லிம்கள் கருதுகிறார்கள். குர்ஆனில் இதற்கு ஆதாரமேயில்லை என்று அங்கு அவர்களுக்குச் சொல்லப்போன அய்யர் அவர்கள் பெண்களை எட்டு வயதிலிருந்து 12 வயதிற்குள் விவாகம் செய்து கொடுத்து விட வேண்டும்; இல்லாவிட்டால் பெண்கள் கெட்டுப்போய் விடுவார்கள்; வைதீகம் போய்விடும்; வேத சாஸ்திரம் சம்மதிக்காது; எங்கள் கடவுள் உத்தரவு கொடுக்கவில்லை; பெண்கள் அவதிப்பட்டாலும் வியாதியால் கஷ்டப்பட்டாலும், குழந்தைகள் கர்ப்பத்திலேயே அழிந்தாலும் எலிக்குஞ்சு பூனைக்குட்டிபோல் பிறந்தாலும், ஈஸ்வரி எங்கள்பாடு எங்கள் மதச்சட்டம் நீங்கள் எங்கள் மதத்தில் பிரவேசிக்கப்படாது; திடசாத்திர மிருக்கப்பட்டவர்கள் தடியெடுத்துக் கொண்டு எங்கள் சாமியையும் எங்களையும் உபத்திரவப் படுத்தவந்தால் அப்பொழுது உங்கள் ராஜாங்கத்திடம் தெரியப்படுத்துகிறோம். அப்பொழுது தர்ம துரை அவர்கள் நீதியுள்ள ராஜாங்கத்தைக் கொண்டு எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்ல வைசிராயிடம் தூது செல்லப் புறப்படும் சபைக்கு மட்டும் அய்யர் அவர்கள் ஆசீர்வாதத் தந்தியை அனுப்பலாமா? இந்த அதிநுட்பமான இந்து மதத்தத்துவத்தைத்தான் இந்துக்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்று சுயமரியாதைச் சங்கம் சொல்லுகிறது.


"ரஸ்மத்"

முகப்பருக்களுக்கு

ஆச்சரியமான மருந்து

டப்பி விலை 12 அணா.

விலாசம்:—

கேஷலன் கம்பெனி,

(53) வேலூர், (வட ஆர்காடு.)



ஏஜண்டுகள் தேவை

"குடி அரசு", "ரிவோல்ட்" பத்திரிகைகளை விற்பனை செய்ய லால்குடி, நிலக்கோட்டை, செங்கோட்டை, திருவண்ணாமலை, கும்பகோணம், திருநெல்வேலி, திருவிடைமருதூர், விழுப்புரம், அம்பாசமுத்திரம், சிவகாசி முதலிய இடங்களிலும் இன்னும் பல முக்கிய இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை

மானேஜர்.



"பல் ஜாக்கிரதை"

தங்கள் விலாசம் தெரிவித்தால் சஞ்ஜீவி கல்நார் பற்பொடி இனாமாக அனுப்பப்படும்.

எங்கள் விலாசம்:—

ஏ. இ. முகையத்தீன் மெடிக்கல் ஹால்,

வலங்கைமான், தஞ்சை ஜில்லா.



வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!

"யாதவ மித்திரன்" பத்திரிகை

யாதவ கனவான்களே!

நீங்கள் பலநாளாக எதிர்பார்த்த யாதவ மித்திரன் என்னும் மாத சஞ்சிகை தயாராகிவிட்டது. இது ஒவ்வொரு யாதவகுல நண்பர்களும் அவசியம் படிக்கவேண்டிய அரிய பத்திரிகை. நமது குல அபிவிருத்திக்குரிய அரிய பெரிய வியாசங்களோடு திகழ்கின்றது. படிப்போர் ஒவ்வொருவருக்கும் சிறந்த அறிவையும் குதூகலத்தையும் கொடுக்குமென்பதில் ஐயமில்லை. பளபளப்பான காகிதத்தில் கண் கவரும் கண்ணபிரானது திருவுருவப் படங்களுடன் விளங்குகின்றது. இந்த ஆவணிமாதம் கண்ணன் திருவவதார நாளாகிய கோகுலாஷ்டமி அன்று இப்பத்திரிகை நம் குலத்தோர் ஒவ்வொருவர் கையிலும் இருப்பது மிக விசேஷமாகும். அதற்குத் தகுந்தபடி முன்னரே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விலாசங்களைத் தெரிவித்து பத்திரிகைப் பெற்றுக்கொள்வதோடு தங்களது யாதவ நண்பர்களது விலாசத்தையும் தெரிவியுங்கள். பத்திரிகைக்கு முந்துங்கள்!

வருடச் சந்தா ரூ. 1—0—0.

அயல் நாட்டுக்கு ரூ. 1—8—0.

விலாசம் :—

"யாதவ மித்திரன்" ஆபீசு,


ஸ்ரீ கோபால் மஹால், வடக்கு சித்திரை வீதி,

(45) மதுரை.



முந்துங்கள்! முந்துங்கள்!!

விலை ரூபா 2—12—0 தான்



130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி

சாமான்கள் விவரம்.

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை ஷர்ட்டு பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் அதல பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1; காமிநேஷன் அதனசாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் சீவிப்புடன் கூடிய கவர் 1; பலகை பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலகை சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.

சி. கிருஷ்ணா ஏஜன்சி,

(3) தபால்பெட்டி 119, மதராஸ்.



பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம் :— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

## Beauty For Ladies !
## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்லாப் கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள நூதனமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4- 6.
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12.

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.

(31)



## எங்கு சரசமான விலை? நயம் சரக்கு?

அயல் நாட்டிலிருந்து இவண் வந்து விற்பதற்கு சரியான பெல்கால், கலர், சில்வர், மேச்சஸ்கள், மாவிக்வயர் அடியிற் கண்டவர்களிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டிகம்பெனி,
(37) பாலக்காடு, (தென்மலபார்.)



## குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
(எப்) மாதப்பதிப்பு ரூ. 1—8—0



## ஸ்ரீகிருஷ்ணானந்த கௌதம பரிமள ஸ்டோர்

தணம் தன்றதது! மணம் மாறாது!

எங்களிடம் குளிர்ந்த சந்தனாதித் தைலம், வாசனைமிகுந்த அரைக்கீரை விதைத் தைலம், மயிர் வளரும் கோபிகா கூந்தல் தைலம், பற்பொடி, உயர்ந்த ஊதுவத்தி தினுசுகள், புனுகு, ஜவ்வாது, அரகஜா, பன்னீர் இன்னும் அநேக வாசனை சாமான்கள் கிடைக்கும். இனாமாக கேட்லாக் அனுப்பப்படும்.

விலாசம்:—
மானேஜர்
ஸ்ரீகிருஷ்ணானந்த
கௌதம பரிமள ஸ்டோர்,
வலங்கைமான்
26 (Via) கும்பகோணம்.



## திருப்பூர் பனியன்கள்

முதல்தரம் கார்டிகன் 32 இஞ்சு டஜன் 1-க்கு 6-8-0. வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

The General Knitting Factory,
TIRUPUR.



### அற்புத
## எலெக்டிரிக் மோதிரம்

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது !



இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதாரத்தாரும் உபயோகப்படுத்தலாம். இம்மோதிரத்திற்குள்ளிருக்கும் எலக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும் நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள் !

இம்மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பெற்றிருக்கின்றது. இதை விரலில் போட்ட மாத்திரத்தில் அதினின்றும் எலெக்டிரிக் பவர் மின்சார சக்தி வெளியாகி விரல் மூலம் அது சரீரமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம் சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிதினமும் வந்து குவிந்துக் கொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 8 0
மோதிரம் 3-க்கு விலை ரூபா 3 12 0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
3) தபால் பெட்டி 119, மதராஸ்.



ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்
## ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, துர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

## பார்ச வாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு ஏர்வாடி போஸ்ட்,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)


(41)



## ஒரே மாதம் வரையில் ரூ. 5-14.
## ஒரு உண்மையான கிராமபோன்

என்ன விலைக்குக் கிடைக்கிறது, பாருங்கள்.

பிக்மி போன் என்று சொல்லப்படும் சிறிய சைஸ் கிராம்போன் இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக்கூடியது.



இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப்போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில் சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப்பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக்கூடிய ஒரு ரிக்கார்டும் இனாமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாரிலுள்ளன.

தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1.
ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14.
தபால் செலவு ரூ 1-5.
உடனே எழுதுங்கள்.

Sole distributors.—
CANADION WATCH PEOPLE,
(8) G. P. O. MADRAS.



## ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.
## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0
ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
(3) தபால்பெட்டி 119, மதராஸ்.



## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்சில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள்கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது.

ரூபா 1—8—0
உடனே எழுதுங்கள்.

வாஸன் புஸ்தகசாலை,
(3) 214, தங்கசாலை வீதி, மதராஸ்.


## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும்
# அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேசபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை

விளம்பரம்

இதைக் கண்ணுறும் கனவான்களே!



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்

### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்டரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, ஓவோய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுவீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும் போது பொறக்கமுடியாத பாதையைத்தரும் நீரிமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறொன்றுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் சொளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும் தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்யதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தாப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட ருப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாரங்கள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1 12 0 தபாற்கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(6) விலாசம்:— கருணாநிதி டிப்போ, 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.


திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.